விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 18.03.2021 வியாழக்கிழமை | இதழ் : 108 | பக்கங்கள் : 16



07

பண்டிகை காலத்தில் பயணக் கட்டுப்பாடு!



08

கொரோனா தடுப்பூசியால் இரத்தம் உறைகின்றதா?



12

தெற்காசிய நாடுகளில் 228,000 குழந்தைகள் பலி!



13

இரு வீரர்களுக்கு 8 ஆண்டுகள் தடை!

# வடக்கு காணி ஆவணங்கள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு!

## முறைப்பாடுகளை அடுத்து உடனடி நடவடிக்கை என்கிறார் மஹிந்தானந்த



(நமது செய்தியாளர் சேகு)

கொழும்பு, மார்ச் 18

யாழ். மாவட்ட செயலக வளாகத்தில் இயங்கும் வடக்கு மாகாணக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இருந்து இரவோடு இரவாக அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட காணி ஆவணங்கள் அனைத்தையும் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஈழநாட்டுக்குத் தெரிவித்தார். 15

## பிரேரணைக்கு ஆதரவளிக்கக் கோரி பிரிட்டன் அமைச்சர் டில்லியில் பேச்சு

### ஜெய்சங்கர் உட்பட அதிகாரிகள் பலரை சந்தித்தார்



புதுடில்லி, மார்ச் 18

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணை மீதான வாக்களிப்பு எதிர்வரும் 22 ஆம் 15



## ரவி கருணாநாயக்க கைது! 23 வரை விளக்கமறியல்

கொழும்பு, மார்ச் 17.


முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க உள்ளிட்ட 8 பேர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர். மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள இவர்களை, 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது. 15

## இலங்கைக்கு இந்தியா ஜெனிவாவில் ஆதரவு

### அரசாங்கம் திட்டவட்டம்

கொழும்பு,மார்ச்.18

ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வின் போது இலங்கையின் பிராந்திய இறை யாண்மையைப் பாதுகாக்கும் என இந்தியா உறுதியளித்துள்ளது 15



## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் அஸாத் சாலிக்கு தொடர்புண்டு

### அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 18

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் அஸாத் சாலிக்கு தொடர்பிருப்பதாக தெரியவந்துள்ளது. அதன் காரணமாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகள் தொடர்கின்றன என்று பொது மக்கள் பாது 15



## அரசியலுக்கு வருகின்றார் சந்திரிகாவின் மகன் விமுக்தி



கொழும்பு, மார்ச் 18

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது மகன் தகுந்த நேரத்தில் அரசியலுக்குப் பிரவேசிப்பார் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

நாட்டிலுள்ள இளைஞர், யுவதிகள் அனைத்தையும் மாற்றியமைக்கவேண்டும் என்ற புதுச்சிந்தனைக்குள் பிரவேசிக்கின்ற சந்தர்ப்பத்திலேயே அது நிகழும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூக வலைத்தளமொன்றில் நடத்தப்பட்ட நேர்காணலில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட சந்தர்ப்பத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஆனாலும் குடும்ப அரசியலை தாம் வெறுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



## சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்தக்கோரி பேரணி

### யாழில் நேற்று பெருமளவானோர் திரள்வு

யாழ்ப்பாணம்,மார்ச்.18

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துமாறு கோரி, யாழ்ப்பாணத்தில் நேற்றுப் புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்துடன் பேரணி முன்னெடுக் 15

## யாழ்.பல்கலை. மாணவர்கள் மூவர் உட்பட வடக்கில் நேற்று 9 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மார்ச்.18

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்கள் மூவர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் ஒருவர் யாழ்.நகரைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமி என்று 15

## வீதி விபத்தில் படுகாயமடைந்த வவுனியா இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

மீசாலை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன் நேற்று முன் தினம் இரவு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்த னர்.

கிளிநொச்சி பகுதியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றில் பணி புரிந்து வந்த, கனகராயன்குளம் வவு 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## வடக்கு காணி...

யாழ். மாவட்ட செயலக வளாகத்தில் இயங்கிவரும் மாகாணக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இருந்த காணி ஆவணங்கள் அனைத்தும் கடந்த 8ஆம் திகதி இரவு அனுராதபுரத்துக்கு அவசர அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டன.

அரசின் இந்த நடவடிக்கைக்கு தமிழ் அரசியல் கட்சிகள் உட்படப் பல தரப்புகளிடமிருந்து கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இது தொடர்பில் எழுந்த கடும் எதிர்ப்பலையை அடுத்து எடுத்துச் செல்லப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவருவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வாழ்வாதாரக் குழுவின் யாழ், கிளிநொச்சி மாவட்ட கூட்டத் தொடர் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயிடம் வடக்கு காணி ஆவணங்கள் அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோருடன் அமைச்சர் மஹிந்தானந்த தொலைபேசியில் பேச்சு நடத்தினார்.

இதனை அடுத்தே இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்ட வடக்குக் காணி ஆவணங்கள் அனைத்தையும் மீண்டும் யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்குத் தான் நடவடிக்கை எடுத்துள்ளார் என அமைச்சர் மஹிந்தானந்த கூறினார்.

இது குறித்து அமைச்சர் மஹிந்தானந்த ஈழநாட்டுக்கு கருத்து வெளியிடுகையில்-

வடக்கு மாகாணக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆவணங்கள் அனுராதபுரத்துக்கு மாற்றப்பட்டமை குறித்து எனக்கு பல தரப்புகளிடம் இருந்தும் முறைப்பாடுகள் கிடைத்தன. இது தொடர்பில் நான் காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவுடனும், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவருடனும் பேச்சு நடத்தினேன்.

இதனை அடுத்து எடுத்துச் செல்லப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் மீண்டும் யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கும், எதிர்காலத்தில் அந்தச் செயற்பாட்டை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவ்வாறான செயற்பாடு இடம்பெறாது-என்றார். (அ)

## யாழ். பல்கலை...

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 262 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் எவருக்கும் தொற்று இருக்கவில்லை.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 444 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 6 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட யாழ். நகரைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமி,

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வசிக்கும் காரைநகர் இ.போ.ச. சாலையில் பணியாற்றும் வாகனத் திருத்துநர் ஒருவர், மல்லாவி மீன் சந்தை தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என்று சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இருவர்,

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவர்,

வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் பெண் ஒருவர் ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து 395 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த மூவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள். கிளிநொச்சி, புத்தளம் மற்றும் மாத்தறையைச் சேர்ந்த மூவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டனர் என்று மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

## இலங்கைக்கு...

என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற இணைய வழியிலான கலந்துரையாடலில் உரையாற்றியபோதே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே இவ்வாறு குறிப்பிட்டார்.

வர்த்தக மற்றும் ஏற்றுமதி உறவுகளின் அடிப்படையில் இலங்கைக்கு ஆதரவை வழங்க பல நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அதன் பிராந்தியத்தில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளத்தால் சூழப்பட்டுள்ள நிலையில் ஐ.நா. தீர்மானத்துக்கு எதிராக அந்த நாடுகளின் ஆதரவு தேவை எனவும்

தற்போது பாகிஸ்தான் தனது ஆதரவை தெரிவித்துள்ளபோதும் இந்தியா தொடர்ந்து நடுவுநிலை அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது.

ஏப்ரல் மாதம் தமிழ்நாடு தேர்தல் உட்பட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்தியா தற்போது நடுவுநிலை வகிப்பதாக அறிவித்திருக்கலாம் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே கூறினார்.

இந்தியாவின் நகர்வை பல நாடுகள் அவதானித்துக்கொண்டிருக்கும் இந்த முக்கியமான கட்டத்தில் இந்தியா தனது ஆதரவை வழங்க வேண்டும் என இலங்கை எதிர்பார்க்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இதுபோன்ற மேற்கத்திய நாடுகளின் அழுத்தங்களுக்கு ஒரு போதும் இலங்கை அரசாங்கம் அடிபணியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

## வீதி விபத்தில்...

னியா பகுதியைச் சேர்ந்த முகுந்தரூபன் துவாரகன் (வயது-21) என்ற இளைஞனே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி மீசாலை பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டு இருந்த போது மீசாலை மில்லடி பகுதியில் குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளை முந்திச் சென்ற பட்டா வாகனம், சமிக்கை எதுவும் போடாமல் திடீரென இடப்பக்கம் திரும்ப முற்பட்டுள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிள் பட்டா வாகனத்துடன் சடுதியாக மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்து சம்பவத்தில் தூக்கி வீசப்பட்ட இளைஞன் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வீதியால் சென்றவர்களினால் காப்பாற்றப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும் இளைஞன் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இறப்பு விசாரணை இடம்பெற்றது. திடீர் இறப்பு விசாரணை அலுவலர் நமசிவாயம் பிறேம்குமார் இதனை மேற்கொண்டார்.

இதையடுத்து உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.




# விடுதலைப்புலிகளின் தளபதிகள் குடியிருந்த பகுதிகளில் அகழ்வு!

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் இரு வேறு இடங்களில் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது. பாரதிபுரம் மாகாவித்தியாலயம் பாடசாலைக்கு பின்பகுதியில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் குடியிருந்ததாகக் கருதப்படும் இரு வேறு இடங்களிலேயே இவ்வாறு அகழ்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் இந்தப் அகழ்வுப் பணிக்காக அனுமதி பெறப்பட்டு நேற்று பிற்பகல் 2 மணியளவில் அகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜாவின் கண்காணிப்பின் கீழ் இந்த அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட பலரும் அங்கு இருந்தனர்.

அகழ்வுப் பணிகளின்போது எவ்விதமான பொருட்களும் அடையாளம் காணப்படவில்லை.

## பிரேரணைக்கு...

திகதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கு இந்தியா வின் ஆதரவைப் பெறுவதற்கான தீவிர முயற்சிகளை பிரிட்டன் முன்னெடுத் திருக்கின்றது.

இந்தியாவில் தற்போது விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டனின் பொது நலவாய மற்றும் ஐ.நா. விவகாரங்களுக்கான அமைச்சர் தாரிக் அஹமட், ஜெனிவா விவகாரம் தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் விரிவாகப் பேசியிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், வெளிவிவகார செயலாளர் ஹார்ஷ் சிறிங்லா உட்பட உயர் அதிகாரிகள் பலரையும் பிரிட்டன் அமைச்சர் சந்தித்துப் பேசியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய - பிரிட்டன் உறவு, பிராந்திய விவகாரங்கள் என்பவற்றுடன் இலங்கை விவகாரம் தொடர்பிலும் முக்கியமாக இரு தரப்பினரும் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து இணைத் தலைமை நாடுகளின் சார்பில் பிரிட்டன் சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு பல நாடுகள் ஏற்கனவே தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன. இருந்த போதிலும், இவ்விடயத்தில் இந்தியா எவ்வறான நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றது என்பதே முக்கியமானதாக நோக்கப்படுகின்றது.

வாக்களிப்பில் கலந்துகொள்வதை இந்தியா தவிர்த்துக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்க வேண்டும் என பிரிட்டன் இந்தியாவைக் கேட்டுவருகின்றது.

அதேவேளையில், கடந்த வாரம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தொலைபேசியில் உரையாடிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரேரணைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே தற்போது இந்திய விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பிரிட்டன் அமைச்சர் தாரிக் அஹமட், ஜெனிவா விவகாரம் குறித்து இந்திய தலைவர்கள், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேசியிருப்பதுடன், பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறும் கேட்டுக்கொண்டதாக புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 18

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பு நேற்று மேலும் வீழ்ச்சியடைந்தது.

பணப் பரிமாற்றங்களுக்கான வணிக வங்கி சராசரி அமெரிக்க டொலர் விற்பனை விகிதம் 201. 75 ரூபாவாகவும் கொள்முதல் விகிதம் 197. 58 ரூபாவாகவும் காணப்படுகிறது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை நாணயத்தின் பெறுமதி நாளுக்கு நாள் உயர்வடைந்து வந்தது.

நாட்டில் ஆடம்பரப் பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியமை உள்ளிட்ட காரணிகளால் ரூபாயின் பெறுமதி தளம்பலின்றிக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேச...

கப்பட்டது.

நல்லூர் கிட்டுப் பூங்காவிலிருந்து பேரணி ஆரம்பித்து சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுவரும் நல்லை ஆதீனம் முன்பு சென்று நிறைவடைந்தது.

இந்தப் போராட்ட பேரணியில் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், சிவில் சமூகத்தினர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கட்சியினர் உட்பட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர். (எ)

## உயிர்த்த...

காப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று தெரிவித்தார். மேலதிக தகவல்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை.

## ரவி கருணா...

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகளான தமித் தொடவத்த, மஞ்சுள திலகரத்ன மற்றும் மொஹமட் இர்ஷடீன் ஆகிய நீதிபதிகள் குழாமால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிபிரிய ஜனசுந்தர, பிரதிவாதிகளுக்கு பிணை வழங்குவதற்கு கடும் ஆட்சேபனையை தெரிவித்ததையடுத்து, பிரதிவாதிகளை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

## இதுவும் நடந்தது!

லண்டனில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த அம்பிகை செல்வகுமாரின் போராட்டம் குறித்து இந்தப் பத்தியில் ஏற்கனவே தெரிவித்திருந்தோம்.

ஒரு போராட்டத்தை தொடங்குகின்ற போது அதுகுறித்து, தெளிவான அரசியல் பார்வை ஒன்று போராட்டக்காரரிடம் இருக்கவேண்டும். அவரது கோரிக்கைகளை யார் தயாரித்தார்கள் என்பது இன்றுவரை யாருக்கும் தெரியவில்லை. எந்தவித முன் அறிவிப்பும் இன்றி அவர் திடீரென்று தனது தந்தை நிர்வகிக்கும் ஆலயத்திற்கு முன்னால் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இரண்டு நாளில் அங்கு காணாமல் போனவர் பின்னர் தனது வீட்டில் தொடர்வதாக செய்திகள் வந்தன. அவர் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் சிலவற்றை வலியுறுத்தி போராடியதால் வேறு வழியின்றி பலரும் ஆதரிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அவருக்கு ஆதரவாக பிரிட்டனில் இயங்கும் முக்கிய தமிழ்த் தேசிய அமைப்புக்கள் எதுவும் அவர் பின்னால் நிற்கவில்லை என்பதையும் ஊர்க்குருவி சுட்டிக்காட்டியிருந்தது. அவர் போராட்டத்தில் குதித்து பல நாட்களின் பின்னர் சுமார் நூறு பேர் புலிக்கொடிகளுடன் அவர் வீட்டுக்கு முன்னால் திரண்டு ஆதரவு தெரிவித்திருந்த அதே வேளை, தமிழகத்திலிருந்தும் தாயகத்திலிருந்தும் ஆதரவுக்குரல்கள் கேட்டன. முக்கியமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது ஆதரவை வெளியிட்டிருந்தது.

யுத்தம் நடந்துகொண்டிருந்த போது, யுத்தத்தை நிறுத்த வலியுறுத்தி பொதுவெளியில் பல்லாயிரக்கணக்கானவர்கள் முன்னிலையில் நடந்த ஒரு போராட்டத்திலேயே உண்ணாவிரதமிருந்தவர், 'மைக் டொனால்ட் பேகர்' சாப்பிட்டார் என்று லண்டன் பத்திரிகை ஒன்று பரபரப்பு செய்தி வெளியிட்டிருந்ததை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். அப்படியிருக்க, இந்த அம்மையார் தனது வீட்டில் தனது சகோதரரும் இன்னும் சிலரும் மாத்திரம் இருக்க உண்ணாவிரதம் இருந்தது கவனிக்கத்தக்கது.

அதுதவிர, இவ்வாறு நீண்ட நாட்களாக சர்ச்சைக்குரிய வகையில் போராட்டம் நடாத்திக்கொண்டிருப்பவர், தனது கோரிக்கைகளில் எவ்வளவு தூரம் உறுதியாக இருப்பார் என்பதையும் உளவியல் ரீதியாக நம்மவர்கள், குறிப்பாக ஆதரவு தெரிவிக்கின்ற அரசியல் தலைவர்கள் கவனத்தில் எடுத்திருக்கவேண்டும்.

அவர் கோரிக்கை வைத்தது பிரிட்டனிடம். வைக்கப்பட்ட கோரிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானம் தொடர்பானது. அத்தகைய தீர்மானத்தில் இவரது கோரிக்கைகளை சேர்த்துக்கொள்வது பிரிட்டனின் தனிப்பட்ட விவகாரமல்ல. பிரிட்டன் விரும்பினாலும், அதனை மற்றைய உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ளவேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டே நமது கோரிக்கைகளை முன்வைத்திருக்கவேண்டும். அப்படி கருத்தில்கொள்ளப்பட்டதா என்பது இன்றுவரை தெரியவில்லை.

இப்போது விடயம் அதுவல்ல. அந்த அம்மையார், போராட்டத்தை கைவிட்ட பின்னர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியிட்ட அறிவிப்புத்தான் கவனிக்கத்தக்கது.

அந்த அம்மையார் முழுத் தமிழினத்தையும் ஏமாற்றிவிட்டதாக பொன்னம்பலம் அழுது புலம்பியிருக்கிறார்.

இப்படித்தான் 2015 தேர்தலில் தோல்வி அமைந்த பின்னர் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் மக்கள் பேரவை, எழுக தமிழ் என்று சேர்ந்து இயங்கிய பொன்னம்பலம் 2018ல் அவரை இந்திய 'அடிவருடி' ஆக்கினார். தனக்கு தேவை என்கின்றபோது பயன்படுத்துவதும் பின்னர் துரோகி ஆக்குவதும் சிலருக்கு பழகிப்போன விடயங்கள்.

பல தசாப்தங்கள் கூடி வாழ்ந்துவிட்டு, மனவியுடன் விவாகரத்து வரை விரிசல் வந்ததும் அவரது நடத்தையை விமர்சிப்பது போன்றதுதான் இது!

- ஊர்க்குருவி.

# போராடும் சுகாதார தொண்டர்களுக்கு அமைச்சர் மஹிந்தானந்த உறுதிமொழி!

## கூடச் சென்ற அங்கஜன் எம்.பிக்கு எதிர்ப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணத்தில் தொடர் போராட்டம் நடத்தி வரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களை நேரில் சந்தித்துப் பேசிய அமைச்சர் மஹிந்தானந்த, ஜனாதிபதியை அவர்கள் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார்.

இதன்போது, போராட்டக்காரர்களை சந்திக்க அமைச்சர் மஹிந்தானந்தவுடன் சென்ற அங்கஜன் எம்.பிக்கு சுகாதார தொண்டர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

நிரந்தர நியமனத்தில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறி கடந்த 17 நாட்களாக வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தொடர் போராட்டம் நடத்தி வந்தனர்.

நேற்றையதினம் அவர்கள் யாழ். மாவட்ட செயலகத்தின் நுழைவாயிலை மூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அச்சமயம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்று திரும்பிய விவசாய அமைச்சர் மஹிந்தானந்த போராட்டக்காரர்களை சந்தித்துப் பேசினார்.

இதன்போதே, அவர்களின் பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்வதாக அமைச்சர் உறுதியளித்தார்.

இதேவேளை, சுகாதார தொண்டர்களுடன் பேசுவதற்காக அமைச்சர் மஹிந்தானந்த சென்றபோது யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் சென்றிருந்தார். அவரின் வருகைக்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். "17 நாட்களாக நாம் போராடி வருகின்ற நிலையில் ஒருநாளும் எட்டிப் பார்க்காதவர். அமைச்சர்கள் எங்களை சந்திக்கும் போது எதற்கு வந்து நிற்கிறீர்கள்", என்று போராட்டக்காரர்கள் அங்கஜன் எம்.பியிடம் இதன்போது கேள்வியும் எழுப்பினர். (ஐ)

# கொடிகாமத்தில் 11 குடும்பங்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டன!

யாழ்ப்பாணம், மார்ச் 18

கொடிகாமம் மத்தி ஜே/327 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 11 குடும்பங்களுக்கு காணி உறுதிகள் நேற்று சம்பிரதாயபூர்வமாக வழங்கப்பட்டன.

கொடிகாமம் மத்தி கிராம செயலகத்தில் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் கொடிகாமம் திருநாவுக்கரசு நாயனார் மடாலயத்திற்கு சொந்தமான காணியில் சுமார் 11 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களுக்கு சொந்தக் காணிகள் இல்லாமையால் வீட்டுத்திட்டம் உட்பட்ட அரசின் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் கிடைக்கப்பெறவில்லை.

தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வந்த இவர்களுக்கு கிராமத்தின் சமூக மட்ட அமைப்பினரும் பொதுமக்களும் சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரனிடம் குறித்த காணித் துண்டுகளை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்து கொடிகாமம் திருநாவுக்கரசு நாயனார் மடாலயத்தினரிடம் உபதவிசாளர் மயூரன் தொடர்ச்சியாக கேட்டுக்கொண்ட தற்கிணங்க காணிகளற்ற சுமார் 11 குடும்பங்களுக்கு தலா நான்கு பரப்பு வீதம் காணிகள் பகிந்தளிக்கப்பட்டன.

இந்தக் காணிகளுக்கான ஆவணங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா. கிஷோர், திருநாவுக்கரசு நாயனார் மடாலய தலைவர் திருநாவுக்கரசு, செயலாளர் ஏகாம்பரநாதன் ஆகியோர் இணைந்து மக்களிடம் வழங்கி வைத்தனர்.

(ஐ)



# மருதடி விநாயகர் ஆலயத்தில் பழைய விக்கிரகங்கள் பிரதிஷ்டை

நவாலி, மார்ச் 18

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மருதடி விநாயகர் ஆலயத்தின் பழமையான விக்கிரகங்கள் மீண்டும் கோயிலில் தனியான இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் கற்றளி கோயிலாக புனருத்தானம் செய்யப்பட்டு, 2015 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதன்போது ஆலயத்தில் புதிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. பழைய விக்கிரகங்கள் முழுமையாக அகற்றப்பட்டன.

ஆனால், பழைய விக்கிரகங்கள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் என ஊர் மக்கள் வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில், மருதடியான் பெறுநர் குழு, வழிகாட்டல் குழு, ஆகமங்கள் கற்றறிந்த ஆன்றோர், சிவாச்சாரியார்களின் வழிகாட்டலுடன் பழமையான விக்கிரகங்கள் கடந்த 14ஆம் திகதி ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு ஓரிடத்தில் ஒன்றாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டன. (ஐ)




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu
18.03.2021 வியாழக்கிழமை
சார்வரி, பங்குனி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# பாகிஸ்தானின் தலையீடு

முகத்தை முழுமையாக மூடிக்கொள்ளும் வகையில் முஸ்லிம்கள் அணியும் 'புர்கா' என்னும் ஆடையை தடைசெய்வது தொடர்பில் அரசாங்கம் ஆலோசனை நடத்திவருவதாக செய்திகள் வெளியாகிருக்கின்றன. இதுதொடர்பில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர். ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து, முஸ்லிம்கள் தொடர்பில் சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டுமென்னும் கோரிக்கை எழுந்திருந்தது. ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னர் ஆட்சியை பொறுப்பேற்ற கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை கைது செய்வோம் என்னும் சூழுரையுடன்தான் ஆட்சியை கைப்பற்றியிருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் அண்மையில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகியது. ஆனால், இலங்கை கத்தோலிக்க மக்களின் தலைவராக கருதப்படும் கர்தினால் மல்கம் ரஞ்சித், ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் தொடர்ச்சியாக சந்தேகத்தை வெளியிட்டுவருகின்றார். சர்வதேச நீதிமன்றத்தை நாடப்போவதாக கூறிவருகின்றார். அரசாங்கத்தை பொறுத்தவரையில் இது புதிய நெருக்கடியாக மாறியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், முஸ்லிம்கள் முகத்தை மூடும் வகையில் அணியும் ஆடையின் பாவனையை தடைசெய்யும் யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இச் செய்தி வெளியானதைத் தொடர்ந்து, இது முஸ்லிம் மக்களின் உரிமைகளை மீறும் செயலென இலங்கைக்கான பாக்கிஸ்தானின் தூதுவர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருந்தார். இதுதொடர்பில் பதிலளித்திருக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர, பாக்கிஸ்தானின் விருப்பத்திற்கு ஏற்ப நாம் முடிவுகளை எடுக்கமுடியாது, எமது நாட்டின் தேவைகளுக்கு ஏற்பத்தான் முடிவுகளை எடுக்கமுடியுமென்று தெரிவித்திருக்கின்றார். முஸ்லிம்களின் ஜனாசா தொடர்பில் தொடர்ச்சியான எதிர்ப்பை வெளியிட்டுவந்த அரசாங்கம், ஜெனிவா விவாதங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியபோது, தனது எதிர்ப்பை தளர்த்தியிருந்தது. முஸ்லிம் நாடுகளின் ஆதரவை கருத்தில்கொண்டே இவ்வாறானதொரு முடிவை அரசாங்கம் மேற்கொண்டதாகவே பலரும் அபிப்பிராயப்பட்டனர். ஆனால், முஸ்லிம் நாடுகளின் ஆதரவிருந்தாலும்கூட, ஜெனிவா விவகாரத்தில் அரசாங்கத்தினால் வெற்றிபெற முடியுமா என்னும் நிலைமையே தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

இத்தகையதொரு பின்புலத்தில்தான் ஆஷாத் சாலி குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார். சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாகவே அவரது கைது இடம்பெற்றிருக்கின்றது. அவர் அண்மையில் தெரிவித்திருந்த கருத்தினடிப்படையிலேயே, அவரது கைது இடம்பெற்றிருப்பதாக கூறப்படுகின்றது. ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து, அதனுடன் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலருக்கு தொடர்பிருப்பதாக சந்தேகங்கள் எழுந்தன. அதில் அஷாத் சாலியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி, விடயங்களை மிகவும் வெற்றிகரமாக கையாளுவார் என்னும் எதிர்பார்ப்பு ஆரம்பத்தில், பரவலாக காணப்பட்டது. ஆனால், அரசாங்கமோ தொடர்ந்தும் பல்வேறு நெருக்கடிகளால் திணறுவது போன்ற தோற்றமே தெரிகின்றது. இறுதி யுத்தம் தொடர்பிலான பொறுப்புக்கூறல் விவகாரத்தை தட்டிக்கழிப்பதில் உறுதியுடன் இருப்போமென சூழுரைத்திருந்த அரசாங்கத்தினால், இறுதியில் எந்தவொரு பிரச்னையையுமே சரியாக கையாளமுடியவில்லை. ஒவ்வொரு புதிய பிரச்னைகளாலும் அரசாங்கம் திணறிக்கொண்டிருக்கின்றது.

# போர்க்குற்ற விசாரணையை கோரும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா!

- அலசுவது இராஜதந்திரி -

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் தற்போது இடம்பெற்றுவரும் தறுவாயில், இலங்கையின் முதலாவது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இராணுவம் மீது போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்டால் உரிய விசாரணை களை நடத்தியே குற்றச்சாட்டு களை நிரா கரிக்கவேண்டுமென குறிப்பிட்டுள்ளார். ஒரு முன்னாள் இராணுவ தலைமை அதிகாரி என்பதைவிட, தற்போது ஓர் அரசியல் வாதியாக சரத் பொன்சேகா மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார். இதன்மூலம், அவர் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக நடை முறைகள் என்பவை குறித்து, யுத்தம் முடிவுற்ற கடந்த பத்து வருட காலத்தில் ஓர் அரசியல் வாதியாக நன்கறிந்து வைத்துள்ளார் என்ப தையே அறியமுடிகின்றது.

**உண்மை நிலவரம்**

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் கருத்தை பார்க்கும்போது இராணுவத்தினர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டால் அதனை உரிய வகையில் ஆராய்ந்து, உண்மை நிலவரத்தை வெளிக்கொணரவேண்டுமென்ற நிலைப்பாடே மேலோங்கி இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

**இறுதிக்கட்ட யுத்தம்**

மும்முரமடைந்திருந்த சமயத்தில் கிளிநொச்சி மற்றும் வன்னிப் பிரதேச மக்களே பெருமளவு பாதிப்புகளை எதிர்கொண்டிருந்ததோடு, இன்றுவரை நூற்றுக்கணக்கானவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போனோர் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முற்று முழுதாக இராணுவத்தினர் குற்றமிழைக்கவில்லை என்று குறிப்பிடவில்லை. இராணுவத்தினரால் தனிப்பட்ட வகையில் குற்றங்கள் புரியப்பட்டிருக்கலாம் எனவும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

சரத் பொன்சேகா இராணுவ ரீதியாக புலிகளை வெற்றிகொள்வதற்கு தலைமைத்துவத்தை வழங்கியதில் ஏற்பட்ட பிரபல்யம் காரணமாக, 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிட்டார். இதன்காரணமாக அரசியல் பழிவாங்கலுக்குள்ளாகி, இரு வருடகாலம் அவர் சிறைவாசம் அனுபவித்திருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

**சரத் பொன்சேகா உடன்பட்டிருப்பாரா?**

எனவே, இக்கட்டத்தில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய ஒரு விடயமென்னவென்றால், 201ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று சரத் பொன்சேகா ஜனாதிபதியாகியிருந்தால், அவர் தற்போது குறிப்பிடுவதுபோல இராணுவம் மீதான போர்க்குற்ற விசாரணைகளுக்கு உடன்பட்டிருப்பாரா? என்பதேயாகும். தம்மீது நடத்தப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதலிலிருந்தும் மயிரிழையில் தப்பிப் பிழைத்த சரத் பொன் சேகா, தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாக வெற்றி கொள்ள வேண்டு மென்பதில் முனைப்போடிருந்தார். ஆயினும், அவர் போர்க்குற்றங்கள் குறித்து எதனையும் நிராகரிக்காத வராக உரிய விசாரணைகளை நடத்தி அனைத்தையும் தெளிவு படுத்தவேண்டுமென குறிப்பிட்டுள்ளமை, இராணுவத்தின் அதியுயர் பதவியை வகித்த அவரது பொறுப்புணர்வை எடுத்துக்காட்டு வது ஒருபுறமிருக், அரசியல் ரீதியாக தம்மை பழிவாங்கிய ராஜபக்ஷ சகோதரர்களுக்கு ஒரு சவாலையும் விடுப்பதாகவே இருக்கின்றது.



இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித அவலங்கள் மற்றும் இழப்புகளை 'விலாவாரியாக' முதலில் வெளிக்கொணர்வதில் பிரிட்டனின் சனல் - 4 தொலைக்காட்சி அரிய பங்களிப்பை வழங்கியிருந்தது.

**கண்கண்ட சாட்சியங்கள்**

இதுத, இராணுவத்தினர் வழங்கிய பாதுகாப்பு குறித்த உறுதிப்பாட்டையடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்ததன்பேரில் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தோர் குறித்து அவர்களை சரணடையவைத்த உற்றார் உறவினரது கண்கண்ட சாட்சியங்களும் ஏராளமாகவே இருக்கிறன.

எனவே இராணுவ தரப்பு, நம்பிக்கைக்குரிய ஒரு விசாரணை ஒன்றின்மூலமே தான் குற்றவாளியா அல்லது சுற்றவாளியா? என்பதை புலப்படுத்தாதவரை, பாதிக்கப்பட்ட மக்களினால் மாத்திரமல்ல. சர்வதேச சமூகத்தினால்கூட இலங்கையின் படைத் தரப்பு குற்றவாளியாகவே நோக்கப்படும் என்பதைக்குறிப்பிட முடியும். இலங்கையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பாரிய பிரச்னைகள் குறித்தும் அமைக்கப்படுகின்ற ஆணைக்குழுக்கள், விசாரணைகள் என்பவை நம்பகத் தன்மையற்றவை என்பதற்கு 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை முடிவுகள் நல்ல உதாரணமாக இருக்கின்றன.

இவ்வகையில், இறுதிக்கட்ட போரை முன்னின்று வழிநடத்திய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா போர்க்குற்றங்கள் எனக் குறிப்பிடப்படுபவை குறித்த விசாரணைகளின் அவசியத்தை குறிப்பிட்ட நிலையில், அரச தரப்பினர் யுத்தக் குற்றச்சாட்டுகள் எனக் குறிப்பிடப்படுபவற்றை முற்றுமுழுதாக நிராகரித்துவிட முடியாது என்றே கருத முடியும். •

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



## இன்றைய ராசிபலன்

மார்ச் - 18 வியாழக்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி 5
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : பஞ்சமி

**18.03.2021**

**மேடம்** பணியிடத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். பாராட்டு வரும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். நீண்ட கால பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

**இடபம்** பிரியமானவர்களுக்காக விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். பாசம் அதிகரிப்பதன் காரணமாக நெருக்கடிக்கு உள்ளாவீர்கள். வயதானவர்களால் ஏற்பட்ட மருத்துவச் செலவு குறையும்.

**மிதுனம்** புதிய முயற்சிகள் தொடங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தொழிலை விரிவுபடுத்துவதற்கு முயற்சி செய்வீர்கள். பணியிடத்தில் கலவையான நிகழ்வுகள் நடக்கும்.

**கடகம்** கவனமாக செயல்படுங்கள். அடுத்த கட்டத்துக்கு நகர்வீர்கள். முயற்சிகளுக்கு நன்மை தரக் கூடிய பலன்கள் அதிகரிக்கும். மரியாதை குறைவு ஏற்பட்டதாக கற்பனை செய்ய வேண்டாம்.

**சிம்மம்** உற்சாகம் அதிகரிக்கும். வெளி மனிதர்களுக்கு முன் கம்பீரம் கூடும். இத்தனை நாளாக இருந்து வந்த தொல்லை குறைய ஆரம்பிக்கும். எதிர்காலத் திட்டங்களைப் பற்றி சிந்தித்து நல்ல முடிவெடுப்பீர்கள்.

**கன்னி** பெண்களுக்கு அனுகூலமான போக்கு நிலவிவரும். மற்றவர் மனம் நோகப் பேசினால் விளைவு கடுமையாக இருக்கும். மனதுக்குப் பிடித்தவர்களின் அனுசரணை அதிகரிக்கும்.

**துலாம்** குடும்பத்தில் நீங்கள் எவ்வளவு முக்கியம் என்று உணர்வீர்கள். பிள்ளைகளின் சாதனை மகிழ்ச்சி அளிக்கும். கனவு நனவாகும். ஆரோக்கியம் சம்பந்தமான தொல்லைகள் அகலும்.

**விருட்சிகம்** கருத்து வேறுபாட்டால் பிரிந்தவர்கள் வந்து இணைவர். முக்கிய முடிவெடுப்பதில் பிள்ளைகளை ஈடுபடுத்துவீர்கள். நன்றி பாராட்டுவீர்கள். உறவுகளைப் பேணி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு** நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சிறு வருத்தங்கள் மறையும். வாகனத்திற்கு வங்கிக்கடன் கிடைக்கும். பேச்சில் கவனம் தேவை. அன்றாடப் பணிகளில் வெற்றி ஏற்பட்டு திருப்தி கிடைக்கும்.

**மகரம்** சுபச்செலவுகள் கூடும். பிறரிடம் அன்புடன் பழகுவீர்கள். நண்பர்களுடன் மனக்கசப்பு ஏற்படும். வாகனம் வாங்கலாம். பயம் வேண்டாம். முயற்சியில் இருந்த தடைகள் தீரும்.

**கும்பம்** வேற்று இனத்தவரால் நன்மையும் லாபமும் வரும். உங்களின் புத்திசாலித்தனம் பளிச்சிடும். பலர் பாராட்டுவார்கள். பெண்களால் நலம் உண்டாகும். எதிர்பாராத நன்மை வரும்.

**மீனம்** பங்குதாரருடன் கணக்குகளை சரிபார்த்துக் கொள்வது நல்லது. நம்ப முடியாத சம்பவங்கள் நடைபெறும். மதிப்பு பெறுவீர்கள். வெற்று மொழி பேசுபவர்களால் நன்மை ஒன்று உண்டாகும்.

# கட்சித் தொண்டர்கள் மாஸ்க் அணிவதில்லை

## சுகாதார செயலர் குற்றச்சாட்டு



**சென்னை, மார்ச் 18**

**அரசியல் கட்சிக் கூட்டங்களில் பெரும்பாலான தொண்டர்கள் மாஸ்க் அணிவது இல்லை எனவும், அவர்களை மாஸ்க் அணிய தொண்டர்கள் வலியுறுத்தவேண்டும் என தமிழக சுகாதார செயலர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

அரசியல் கூட்டங்கள், குடும்ப நிகழ்ச்சிகளால் கொரோனா பாதிப்பு அதிகரிக்கும். அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்வோரில் பெரும்பாலானோர்மாஸ்க் அணிவதில்லை. மாஸ்க் அணியாவிட்டாலும் கொரோனா வராது என மக்கள் தவறாக நினைக்கின்றனர். தொண்டர்களை மாஸ்க் அணிய தலைவர்கள் வலியுறுத்த வேண்டும்.

தமிழகத்தில் 16 லட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு உள்ளது. அரசு வழங்கும் இலவச தடுப்பூசியை அனைவரும்போட்டு கொள்ளவேண்டும்.

அபராதம் விதித்தால் மட்டுமே பொதுமக்கள் முகக் கவசம் அணிகின்றனர். கடந்த ஆண்டு சென்னையில் பாதிப்பு குறைவாக இருந்த பகுதிகளில், கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. தமிழகத்தில், கேரளா, மஹாராஷ்டிரா உள்ளிட்ட 19 மாநிலங்களில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. தமிழகத்தில், கொரோனா பாதிப்பு படிப்படியாக அதிகரிக்கக்கூடும்.

தமிழகத்தில் ஊரடங்கு அமல்படுத்தப்படும் என வரும் வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம்-என்றார்.

# புதுச்சேரியில் பா.ஜ.க கூட்டணிக்குள் பிளவு!

## பாமக தனித்துப் போட்டி

*புதுச்சேரி, மார்ச் 18*

தொகுதி ஒதுக்கீடு செய்யாததால் புதுச்சேரியில் பாஜக கூட்டணியில் பிளவு ஏற்பட்டுள்ளது.

புதுச்சேரி, காரைக்காலில் பாமக 15 தொகுதிகளில் தனித்துப் போட்டியிடத் திட்டமிட்டு முதல் கட்டமாக 9 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பா.ஜ.க, என்.ஆர்.காங்கிரஸ், அ.தி.மு.க, பாமக ஆகிய கட்சிகள் இடம் பெற்றிருந்தன. இதில், முதலில் என். ஆர். காங்கிரஸுக்கு 16 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. மீதமுள்ள 14 தொகுதிகளைப் பிரிப்பதில் பா.ஜ.க, அதிமுகவுக்கு இடையே இழுபறி ஏற்பட்டது. அப்போது, பா.ம.க தரப்பில் மாநில அமைப்பாளர் தன்ராஜ், பா.ஜ.க மேலிடப் பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானாவைச் சந்தித்து, தங்களுக்கு ஐந்து தொகுதிகளை ஒதுக்கக் கோரினார். முன்னாள் அமைச்சர் நமச்சிவாயமும் பா.ம.க தரப்பில் சந்தித்துப் பேசினார். ஆனால், தொகுதிப் பங்கீட்டில் பாமகவை பா.ஜ.க. இணைக்கவில்லை.

இறுதியில் ஒரு இடம் கூட ஒதுக்கவில்லை. இந்நிலையில், புதுச்சேரி பா.ம.க அமைப்பாளர் தன்ராஜ் நேற்று கூறுகையில்-

புதுச்சேரி, காரைக்காலில் பாமக தனித்து 15 தொகுதிகளில் போட்டியிட முடிவு எடுத்துள்ளது. முதல் கட்டமாக, இன்று 9 தொகுதிகளின்

வேட்பாளர்களை அறிவிக்கிறோம்" என்று தெரிவித்தார்.



# சாதிப்பவனுக்கு வாக்களியுங்கள்!

## கமல்ஹாசன் கோரிக்கை

*சென்னை, மார்ச் 18*

சாதி பார்த்து வாக்களிக்காமல், சாதிப்பவனை பார்த்து வாக்களியுங்கள் என மக்கள் நீதி மைய கட்சித் தலைவர் கமலஹாசன் தெரிவித்துள்ளார்.

சேலம் தாதகாப்பட்டி பகுதியில் மக்கள் நீதி மய்ய கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்து கமலஹாசன் வாக்கு சேகரித்தார்.

அப்போது பேசிய அவர், "வேட்பாளர்கள் மக்கள் குறைகளை தெரிந்து கொண்டு வாக்குறுதிகளை கொடுக்க வேண்டும். மக்கள் நீதி மய்ய வேட்பாளர்கள் போலியான வாக்குறுதிகளை கொடுக்கக்கூடாது.' எனக் குறிப்பிட்டார்.

# எதிர்க்கட்சி இல்லாத ஆட்சி!

## ஸ்டாலின் சூளுரை

*சென்னை, மார்ச் 18*

'தமிழகத்தில் எதிர்க்கட்சி இல்லாமல், தி.மு.க., ஆட்சி அமைக்கும்' என தி.மு.க. தலைவர் மு.கா. ஸ்டாலின் தெரிவித்தார்.

சேலம், கெஜ்ஜல்நாயக் கன்பட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதல்வர் இ.பி.எஸ்ஸுக்கும், இந்த ஆட்சிக்கும் இது கடைசி தேர்தல். அந்த ஆத்திரத்தில்தன்னை மறந்து எல்லை மீறி வாய்க்கு வந்தபடி உளறுகிறார். அவர் எப்படி பதவிக்கு வந்தார் என்பது இந்நாட்டுக்கே தெரியும். தி.மு.க., தேர்தல் அறிக்கையை நகல் எடுத்து அ.தி.மு.க. வெளியிட்டுள்ளது. கடந்த முறை ரேஷன் கார்ட்டுக்கு மொபைல்போன் வழங்குவதாக அறிவித்து கொடுத்தனரா? கருத்துக்கணிப்பு அனைத்தும் தி.மு.கவுக்கு சாதகமாக உள்ளதால் நாம் ஆட்சி அமைப்பது உறுதி. அதனால்



234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று தமிழகத்தில் எதிர்க்கட்சி இல்லாத ஆட்சியை தி.மு.க. அமைக்கும்-என்றார்.

# 29,000 கோடி ரூபாவை சீனாவிடம் கடனாக கேட்டது இலங்கை அரசு

## அம்பலப்படுத்தியது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, மார்ச் 18

**இலங்கையின் தற்போதைய அரசாங்கம் சீனாவிடமிருந்து 1.5 பில்லியன் டொலர்களை கடனாகப்பெறவுள்ள தகவலை ஐக்கிய தேசியக்கட்சி அம்பலப்படுத்தியுள்ளது.**

எதிர்கால தேர்தல் செலவுகளை ஈடுசெய்வதற்காகவா இந்தக் கடனைப் பெறுகிறது என்றும் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சமன் ரத்னப்பிரிய கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

“1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை சீனாவிடமிருந்து அரசாங்கம் கடனாகக் கோரியுள்ளது. இந்தக் கடன் தொகையானது சிறிலங்கா ரூபாவில் 29,250 கோடி ரூபாவாகும். மார்ச் 9ஆம் திகதி சீன அரசாங்கம் இந்தக் கடனுக்கான அனுமதியை அளித்துள்ளது. ஆனால் இவ்வளவுப் பெருந்தொகைக் கடனை அரசாங்கம் பெற்றுக்கொள்கின்ற வட்டி வீதத்தை இதுவரை அறிவிக்கவில்லை. மக்களின் சம்பள அதிகரிப்பிற்காகவா? நிலுவைத் தொகைகளை அளிக்கவா, கொவிட் கால நிவாரணப் பணிகளை முன்னெடுக்கவா அரசாங்கம் பெற்றுக்கொள்ளப் போகின்றது என்பதற்கான விளக்கத்தை அரசாங்கம் மக்களுக்கு அளிக்க வேண்டும். அல்லது எதிர்வரும் தேர்தல் காலத்து செலவுகளை ஈடு செய்வதற்காகவா இந்தக் கடனை அரசாங்கம் பெறுகின்றது என்கிற சந்தேகமும் எழுந்திருக்கின்றது. அதேபோல நாட்டின் அண்மையில் இடம்பெற்ற சீனி மோசடி குறித்து ஆணைக்குழு ஒன்றை அமைத்துவிசாரணை முன்னெடுக்க வேண்டும். மத்திய வங்கி மோசடியில் 1000 கோடி ரூபா ஏப்பமிடப்பட்டதாக கூறியவர்களே இன்று 1590 கோடி ரூபா பிரமாண்ட மோசடியை நிகழ்த்தியிருக்கின்றார்கள். ஆகவே இதுகுறித்த முழுமையான விசாரணையை நடத்துவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் - என்றார்.



# குரங்கு கடித்த தேங்காயுடன் கூட்டத்துக்கு வந்த தவிசாளர்!

முல்லைத்தீவு, மார்ச் 18

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு, குரங்கு கடித்த தேங்காயுடன் துணுக்காய் பிரதேச சபை தவிசாளர் சென்ற சம்பவம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2021ஆம் ஆண்டிற்கான முதலாவது அபிவிருத்தி குழுக் கூட்டம், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், காதர் மஸ்தான் தலைமையில் ஆரம்பமாகியது. பாராளுமன்ற உறுப்பினர்கள் வினோ நோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன், கு. திலீபன் மற்றும் மாகாண பிரதான செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டர்.

இதன்போது, துணக்காய் பிரதேசசபை தவிசாளர் அ. அமிர்தலிங்கம், பிரதேசத்தில் குரங்கு தொல்லை தாங்க முடியாமல் உள்ளது என்று குறிப்பிட்டு, குரங்கு கடித்த தேங்காயை எடுத்துக் காட்டினார்.

குரங்கை கட்டுப்படுத்த துப்பாக்கி கோரியபோதும், அதை பெறுவதில் சிரமம் இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

# இராஜாங்க அமைச்சர் லொகான் யாழ்.சிறைச்சாலைக்கு விஜயம்!



யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தை நேற்று அவசரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உப்புல்தெனியவும் இந்த விஜயத்தில் பங்கு கொண்டார்.

இதன்போது சிறைக்கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுடன் அந்தக் குழுவினர் கலந்துரையாடினர்.

இதன்போது அங்கு உள்ள குறை நிறைகளை கேட்டறிந்து கொண்டனர்.

# மின்சார கதிரை வதந்தி!

கொழும்பு, மார்ச் 18

விடுதலைப் புலிகளுடனான மோதலின்போது மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் தனிநபர்களை மின்சார கதிரைக்கு கொண்டு செல்லப்படுவதாக கூறப்படுவது வெறும் கட்டுக்கதைகள் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் மோகன் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசு தகவல் திணைக்களத்தில், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகேயுடனான கலந்துரையாடலில் இதனை தெரிவித்துள்ளார்.

“குற்றவாளிகள் மின் நாற்காலிக்கு அனுப்பப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஏதேனும் தவறு நடந்தால் இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் என்று கூறுவது பொருத்தமற்றது. சர்வதேச நீதிமன்றத்தால் ஏதேனும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் வழங்கப்படும் சிறைத் தண்டனை மரண தண்டனையோ, மின்சார நாற்காலியோ அல்ல - என்றார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, வெளிநாடுகள் இலங்கையின் கடந்த காலத்தை பாராமல், எதிர்காலத்தை பார்க்க வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

# கஞ்சா போதைப்பொருளுடன் ஓட்டோ சாரதி யாழ்.நகரில் கைது!



யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணத்தில் கஞ்சா போதைப்பொருளை விநியோகித்து வரும் ஓட்டோச் சாரதி ஒருவர் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த 38 வயதுடைய ஓட்டோச் சாரதியே யாழ்ப்பாணம் நகரில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 2 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பல இடங்களுக்கும் கஞ்சா போதைப் பொருளை விநியோகிப்பதாக விசாரணையில் தெரியவந்தது என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# 1000 ரூபா சம்பளம் அரசின் கொள்கை ரீதியான முடிவு

## மாற்றம் இல்லை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, மார்ச் 18

தோட்ட தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பளம் அரசாங்கத்தின் கொள்கை ரீதியிலான தீர்மானமாகும். இதற்கு எதிராக தோட்ட கம்பனிகள் செயற்பட்டால் அரசாங்கம் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க பின் நிற்கப் போவதில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான கலாநிதி ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்தி அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்த சம்பள பிரச்னை தொடர்பாக பல சுற்று பேச்சுகளை நடத்தினார். நியாயமான தீர்வொன்றை இந்த விடயத்தில் எட்டுவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டது எனவும் அமைச்சர் கூறினார்.

கொள்கை ரீதியில் அரசாங்கம் மேற்கொண்ட 1000 ரூபா சம்பள விடயத்துக்கு நிறுவனங்கள் உடன்பாடு தெரிவிக்கவில்லை. இதனாலேயே சம்பள நிர்ணய சபையின் ஊடாக இதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு எதிராக நிறுவனங்கள் செயற்பட்டால், கொள்கை ரீதியில் தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் என்ற நிலைப்பாட்டை செயற்படுத்த ஒருபோதும் அரசாங்கம் பின்நிற்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# இ.போ.ச. பஸ்ஸைப் பிடிப்பதற்காக ஓட்டோவைக் கடத்திய மாணவர்கள்!

இ.போ.ச. பஸ் சென்றுவிட்டதால் மாணவர்கள் இருவர், அந்த பஸ்ஸை பிடிக்க வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்திச் சென்றபோது அந்த ஓட்டோ விபத்துக்குள்ளாகியதில் அவ்விரு மாணவர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து ஹப்புத்தளை பகுதியின் மேல் விகாரகலை எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹப்புத்தளையிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் தரம் 8 இல் கல்வி கற்று வந்த இந்த மாணவர்கள் விபத்தில் கடுங்காயங்களுக்குள்ளானதால், ஹப்புத்தளை பிரதேச வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு ஆரம்ப சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. அதையடுத்து, அவ்விருவரும் தியத்தலாவை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விரு மாணவர்களும் பாடசாலைவிட்டு, வீடு செல்ல இ.போ.ச. பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றனர். பஸ் சென்றுவிட்டதை அறிந்த இந்த மாணவர்கள் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்திக்கொண்டு, குறிப்பிட்ட பஸ்ஸைப் பிடிக்கச் சென்றனர். ஆனால், கடத்திச் சென்ற ஓட்டோ பாதையை விட்டு விலகி தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது.

# கிளிநொச்சியில் பொலிஸார் பாவனையிலுள்ள காணியை அரசுடமையாக்கும் முயற்சி நிறுத்தம்

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் பகுதியில் பொலிஸாரின் பாவனையில் உள்ள காணி அரச காணியாக அளவீடு செய்யப்பட எடுத்த முயற்சி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியில் பெண்கள் சிறுவர் பிரிவு உள்ளிட்ட பொலிஸ் திணைக்களப் பிரிவுகள் பயன்படுத்திவரும் காணியை அரச காணி எனத் தெரிவித்து அளவீடு செய்ய முயற்சி எடுக்கப்பட்டது.

அந்தப் பகுதிக்கு நேற்றுக் காலை 8.30 மணியளவில் சென்றிருந்த நில அளவையாளர்கள், அளவீட்டுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், அப்பகுதிக்கு விரைந்த காணி உரிமையாளர்கள் என தம்மை அடையாளப் படுத்தியவர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தலையீட்டை அடுத்து அளவீட்டு நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த காணி தனியாருடையது எனவும் அதன் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் உள்ளனர் எனவும் அவர்கள் வருகை தரும்வரை காணியை அளவீடு செய்யும் நட வடிக்கையை நிறுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது.



இது தொடர்பாக, எழுத்து மூலமான கடிதமும் வருகை தந்திருந்த நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன், குறித்த பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவையாளரும் அங்கு சென்றிருந்த நிலையில், காணி ஆவணங்கள் தொடர்பாக விவரங்களைக் கேட்டறிந்தார்.

அங்கு சென்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உள்ளிட்ட பலரும் காணி அளவீட்டை இடைநிறுத்துமாறு தெரிவித்தனர். இதையடுத்து, குறித்த அளவீடு செய்யும் நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்டு அதிகாரிகள் திரும்பிச் சென்றுள்ளனர்.



# இலங்கையில் முதன்முறையாக கலைஞர்களுக்கு அரச காப்புறுதி

கொழும்பு, மார்ச் 18

இலங்கையில் முதன்முறையாக மேடை கலைஞர்களுக்கான “ப்ரேக்ஷா“ விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி திட்டம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் ரவர் மண்டப அரங்க அறக்கட்டளை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த ப்ரேஷா விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தால் செயற்படுத்தப்படுகிறது.

அதற்கமைய, ஒரு உறுப்பினர் மரணித்தால் 2 இலட்சம் ரூபாவும், திடீர் மரணம் ஏற்பட்டால் 600,000 ரூபாவும், முழுமையாக ஊனமுற்றால் நான்கு இலட்சம் ரூபாவும், கடுமையான நோய் காப்புறுதிக்கு மூன்று லட்சம் ரூபாவும், வைத்தியசாலையில் அனுமதிக்கு ஆண்டுக்கு அதிகபட்சம் 150,000 ரூபாவும், வெளிநோயாளர் சிகிச்சைக்கு ஆண்டுக்கு 15,000 ரூபா வரையிலும் வழங்கப்படும்.

ப்ரேஷா விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதிகளை வழங்கும் திட்டத்தை குறிக்கும் வகையில் குறியீட்டு ரீதியாக பிரதமரின் கரங்களினால் மேடை நாடக துறையின் சிரேஷ்ட கலைஞர்களுக்கு நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து காப்புறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# 2024இல் சஜித் ஜனாதிபதி: ஆட்சியும் எங்கள் வசம்!

## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை



கொழும்பு, மார்ச் 18

**“எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தற்போதே ஆரம்பித்துவிட்டோம்.”**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் மீண்டும் எமது வெற்றிப் பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம். எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதோடு சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்குவோம். தேர்தலில் வெற்றிபெறக்கூடிய வாறு கீழ்மட்டத்திலிருந்து தேசிய ரீதியில் செயற்திட்டங்களை உருவாக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கிராமிய ரீதியில் ஐக்கிய மக்கள் சக்தியை மேலும் வலுப்படுத்த வேண்டும். அதனைத் தொடர்ந்து மக்களின் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமையில் ஆட்சியமைக்க வேண்டும். எமது குறைபாடுகளைச் சரி செய்துகொண்டு முன்நோக்கிப் பயணிப்பதொன்றே தற்போதைய நோக்கமாக உள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, அவர் அரசியல் பயணத்தை ஆரம்பித்த விதம் தொடர்பில் கூறினார். அவர் அரசியலுக்குள் பிரவேசித்த போது எதிர் கொண்ட சவால்கள் மற்றும் தோல்விகள் தொடர்பில் பகிர்ந்துகொண்டதுடன் தனது தொடர்ச்சியான முயற்சியால் வெற்றிபெற்று, பாகிஸ்தானின் பிரதமராகத் தெரிவானது பற்றியும் குறிப் பிட்டார்.

எனவே நாமும் அனைவரையும் ஒன்றிணைத் துக்கொண்டு எமது இலக்கை அடைந்து கொள்வதற்கு முன் நோக்கிப் பயணிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

# ஆற்றிலிருந்து சடலம் மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 18

ஓட்டமாவடி பகுதியில் நீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்ட நபரொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஆற்றில் மிதந்த நிலையில் அந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தோணி ஒன்றில் தனிமையாக சென்ற நபரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மரணமடைந்த நபர் ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய சேகு இஸ்மாயில் சப்ராஸ் (மீனி) என்பவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிவரை 30 கிலோமீற்றர் நீந்தவுள்ள 48 வயது பெண்



சென்னை, மார்ச் 18

தலைமன்னார் - தமிழகம் தனுஷ்கோடி இடையே நீந்தி சாதனை படைக்கும் முயற்சியில் முதல்தடவையாக பெண் ஒருவர் ஈடுபடவுள்ளார்.

இலங்கை தலைமன்னார் மற்றும் இந்திய தனுஷ்கோடி இடையே சுமார் 30 கிலோ மீற்றர் தூரம் உள்ள கடல் பகுதியை நீந்துவதற்காக ஐதராபாத்தை சேர்ந்த சியாமளாஹோலி (வயது 48) என்ற பெண் ராமேஸ்வரம் வந்துள்ளார்.

இவர் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணி அளவில் ராமேஸ்வரத்திலிருந்து ஒரு விசைப்படகில் இலங்கை தலைமன்னார் புறப்படுகிறார். இரவு முழுவதும் படகிலேயே தங்கியிருக்கும் அவர் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி அளவில் இலங்கை தலைமன்னார் கடல் பகுதியில் இருந்து தனது நீச்சல் பயணத்தை தொடங்க உள்ளார். மாலை 4 மணிக்குள் அவர் தனுஷ்கோடி கரையை வந்தடைவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுபற்றி சியாமளா கூறியதாவது:-

எனது நீச்சல் பயிற்சியாளர் பொலிஸ் உயர் அதிகாரி ராஜீவ்திரிவேதிதான். கிருஷ்ணா நதியில் ஒன்றரை கிலோமீற்றர் தூரமும், கங்கை நதியில் 13 கிலோ மீற்றர் தூரமும், கொல்கத்தாவில் உள்ள ஹூக்ளி நதியில் 14 கிலோ மீற்றர் தூரமும் நீந்தி உள்ளேன். 2019 இல் போர்பந்தரில் 10 கிலோ மீற்றர் மற்றும் 5 கிலோ மீற்றர் நீச்சல் போட்டியில் வெற்றி பெற்று தங்கப்பதக்கமும் பெற்றுள்ளேன். ராம சேது கடலில் நீந்துவது எனது கனவு மற்றும் லட்சியம் - இவ்வாறு அவர் கூறினார்.

“இலங்கை தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை நீந்தி வருவதற்கு இந்திய - இலங்கை அரசிடம் முறையான அனுமதி பெற்றுள்ளேன். இதுவரை தலைமன்னார் - தனுஷ்கோடி இடையே பல பேர் நீந்தி வந்து சாதனை புரிந்துள்ளனர். இருந்தாலும் ஒரு பெண் இந்த சாதனைக்கு முயற்சிப்பது இதுதான் முதல் முறை” என்று பெருமிதத்துடன் அவர் கூறினார்.

(அ)



# வட்டக்கட்சி கல்மடுநகர் பகுதியில் பாலப் புனரமைப்புப்பணி ஆரம்பம்!

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி வட்டக்கட்சி கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பின் வயல் வீதியின் பாலம் புனரப்புச் செய்வதற்கான பணியை கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி ஆரம்பித்து வைத்தார்.

கல்மடுநகர் பாலத்தை கட்டித்தருமாறு கல்மடுநகர் மக்களின் நீண்ட நாட்கள் கனவை நிறைவேற்றி வைத்த கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கல்மடுநகர் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் நேற்று குறித்த பாலத்தைக் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டிப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர் குரூஸ், கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகரிகள் மற்றும் கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# பண்டிகை காலத்தில் பயணக் கட்டுப்பாடு!

## இராணுவத் தளபதி கருத்து



கொழும்பு, மார்ச் 18

வரவிருக்கும் பண்டிகைக் காலங்களில் தேவைப்பட்டால் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதேவேளை, கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்த வரவிருக்கும் பண்டிகைக் காலங்களில் நாட்டை மூடுவது அல்லது முழுமையான பயணக் கட்டுப்பாட்டை விதிப்பது நடைமுறையில்லை என்று இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

ஊடகங்களுடன் பேசிய சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, கோவிட்-19 நோய்த்தொற்றின் எதிர்கால அலைகளைத் தடுக்க மக்களின் பொறுப்பான நடத்தை மிகவும் முக்கியமானது என்று குறிப்பிட்டார்.

# 288 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, மார்ச் 18

குவைத்தில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளான 288 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

சிறிலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் மூலம் நேற்று முன் தினம் இரவு அவர்கள் நாடு திரும்பினர்.

நாடு திரும்பியவர்களுள், பெருமளவானோர் பெண்களாவர்.

# இளம் குடும்பஸ்தரின் கொலையை கண்டித்து கதவடைப்பு போராட்டம்!

## வட்டக்கச்சியில் நேற்று நடந்தது



கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் இளம் குடும்பஸ்தரின் கொலையைக் கண்டித்தும் அதற்கு நீதி கோரியும் அவரது குடும்ப உறுப்பினர்கள்மீது தரும்புரம் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்தும் கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

வட்டக்கச்சி பிரதேசத்தில் நேற்று முழு கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டதுடன் பொதுச் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களை மூடி மக்கள் எதிர்ப்பை வெளிப் படுத்தினர்.

வட்டக்கச்சிப் பகுதியில் கடந்த பத்தாம் திகதி இடம் பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் அருளம்பலம் துஷ்யந்தன் என்பவர் உயிரிழந்தார். இந் நிலையில், கத்தியால் குத்திய நபரின் வீட்டுக்குத் தீ வைக்கப் பட்டிருந்தது.

இதையடுத்து, கடந்த 15 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் சந்தேகநபர்களின் வீட்டில் சில பொருட்களை எடுத்துச் செல்வதற்கு, அவரின் உறவினர்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் சென்றிருந்தனர்.

இந்நிலையில், இறந்தவரின் மனைவி மற்றும் சகோதரிகள் உட்பட கிராம மக்கள் சிலர் ஒன்று சேர்ந்து இறந்தவருக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் போதுமான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்து பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து பொலிஸார், தாக்குதலுக்கு இலக்காகி இறந்தவரின் மனைவி மற்றும் சகோதரிகள் மீது தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையிலேயே, பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்தும் நீதி கோரியும் கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

# சீனிக்கொள்ளை தொடர்பில் சுயாதீன விசாரணை தேவை

## கோருகிறார் ராதாகிருஷ்ணன்



கொழும்பு, மார்ச் 18

மிகப்பெரிய ஊழலாகக் கருதப்படும் சீனிக்கொள்ளை தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு: -

நாட்டில் இன்று பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன. இந்நிலையில் சீனி இறக்குமதி மூலம் வரிமோசடி செய்து அரசாங்கத்துக்கு கோடி கணக்கில் வருமான இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மத்திய வங்கி கொள்ளையைக் காட்டியும் சீனிக்கொள்ளை பெரிய மோசடியாகக் கருதப்படுகின்றது. மத்திய வங்கி கொள்ளை மூலம் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட கம்பனிகளின் வங்கி இருப்புகள் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட் டன. எனவே, சீனிக் கொள்ளை தொடர்பில் உரிய விசாரணை நடத்தி, உரியவர்கள் தண்டிக்கப்படவேண்டும். இதன் பின்னணியில் அரச விசுவாசிகள் இருக்கக்கூடும்.

அதேவேளை, இந்நாட்டில் இடம்பெறும் வன அழிப்பு, சுற்றாடல் அழிவு தொடர்பில் கடந்தகாலங்களில் பிக்குகள் உரத்துக்குரல் எழுப்பினர். அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால், சிங்கராஜ பகுதியில் நடைபெறும் வன அழிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட யுவதியொருவரை மிரட்டும் பணி ஆரம்பமாகியுள்ளது. பொலிஸ் அதிகாரிகள் வாக்கு மூலம் பெற்றுள்ளதுடன், வனத்துறை அதிகாரிகளும் அவரின் வீட்டுக்கு சென்றுள்ளனர். இது குறித்த யுவதியை அச்சுறுத்தும் செயற்பாடாகும். இதனை நாம் கண்டிக்கின்றோம் - என்றார்.

# இலங்கையில் 172 ஆண்டுகளுக்கு பிறகு கண்டுபிடிக்கப்பட்டுள்ள அரிய தாவரம்!



கொழும்பு, மார்ச் 18

அம்பலாங்கொடை மாதம்பாவில சரணாலயத்திற்கு அருகில் ‘கன புஸ்வெலா’ என்று அழைக்கப்படும் இரண்டு மிக அரிதான தாவரங்கள் காலி வனவிலங்கு பாதுகாப்பு சங்கத்தால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

முகுனா ஜிகாண்டியா என்ற தாவரவியல் பெயரால் அழைக்கப்படும் இந்த 2 தாவரங்களும் சுமார் 172 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பேராதனை தேசிய தாவர அருங்காட்சியகத்தின் ஆராய்ச்சியாளரான பாதிய கொபல்லவ இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

சரணாலயத்திற்கு அருகிலுள்ள தனியார் நிலங்களில் இது இருப்பதைக் கண்டோம். அது பூத்துக் குலுங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் கன புஸ்வெலா 1849 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் முதன்முதலில் கண்டு பிடிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

இதுகுறித்து காலி வன விலங்கு சங்கத்தின் தலைவர் மதுர டி சில்வா தெரிவிக்கையில் -

இது மிகவும் மதிப்புமிக்க கண்டுபிடிப்பு. இது அழிந்து விட்டதாக கருதப்படுகிறது. அதன் பாதுகாப்பிற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (அ)




# கொரோனா தடுப்பூசியால் இரத்தம் உறைகின்றதா?

## ஐரோப்பாவில் தீவிரமாகும் சர்ச்சை

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக தயாரிப்பான அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி மருந்து செலுத்தப்பட்டவர்களுக்கு இரத்த உறைவு அறிகுறிகள் ஏற்படுவதற்கான ஆபத்து கிடையாது என்ற ஆய்வு நிறுவனத்தின் வாதத்தை உறுதிபட நம்புவதாக ஐரோப்பிய ஒன்றிய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பான ஐரோப்பிய மருந்துவ ஏஜென்ஜி தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் முன்னர் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கிய தங்களின் அமைப்பு எடுத்த முடிவில் உறுதியுடன் இருப்பதாக அந்த அமைப்பின் தலைமை அதிகாரி எமெர் குக் தெரிவித்துள்ளார்.

அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி போட்டுக் கொண்ட நோயாளிகள் பலருக்கு இரத்தம் உறைவதாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து சில நாடுகள் அந்த தடுப்பூசி போடும் திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளன. இந்த விவகாரம் தொடர்பான விசாரணையை ஐரோப்பிய மருந்துகள் ஏஜென்சி நடத்தி வரும் நிலையில், தடுப்பூசித் திட்டத்தை நிறுத்த வேண்டாம் என சம்பந்தப்பட்ட நாடுகளை உலக சுகாதார அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த நிலையில், ஐரோப்பாவில் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களில் 17 லட்சம் பேருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில், 37 பேர் மட்டுமே இரத்த உறைவு பாதிப்பை எதிர்கொண்டது தெரிய வந்துள்ளதாக ஆஸ்ட்ராசெனேகா கூறியுள்ளது.

இதேபோல, ஐரோப்பிய மருந்துகள் ஏஜென்சியும் தடுப்பூசி போட்டுக் கொண்வடவர்களில் எல்லோருக்கும் இதுபோன்ற இரத்த உறைவு பாதிப்பு ஏற்படுவதில்லை என்று தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் தலைமை அதிகாரி எமெர் குக், "இரத்த உறைவு பிரச்னையால் பலரும் ஐரோப்பாவில் இருப்பதாக அறிகிறோம். ஆனால், அந்த பாதிப்பு, தடுப்பூசியின் விளைவா என்பதை ஆராய்ந்து வருகிறோம். இதேவேளை, கொரோனா வைரஸை எதிர்க்கும் ஆற்றலை ஆஸ்ட்ராசெனீகா மருந்து பெற்றுள்ளது என்பதை நாங்கள் முழுமையாக நம்புகிறோம்," என்று தெரிவித்துள்ளார்.

இதுவரை இரத்த உறைவு பிரச்னையை எதிர்கொண்டவர்களிடம் நடத்தப்பட்ட பரிசோதனையின் முழுமையான முடிவுகளை ஐரோப்பிய மருந்துகள் ஏஜென்சி இன்று வியாழக்கிழமை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஐரோப்பிய நாடுகள் என்ன செய்கின்றன?**

ஆஸ்ட்ராசெனேகா தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களில் சிலருக்கு இரத்த உறைவு பாதிப்பு ஏற்படுவதாக கூறப்பட்டதையடுத்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகள், அந்த தடுப்பூசி திட்டத்தை இடைநிறுத்தியிருக்கின்றன. இரத்த உறைவு என்பது இரத்தத்தின் ஓட்டத்தில் தடங்களை ஏற்படுத்தக்கூடியது என்பதால் அதை உடனடியாக சீராக்காவிட்டால் அது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக அமையும்.

இந்த நிலையில், தங்கள் நாட்டில் தடுப்பூசி திட்டம் இடைநிறுத்தப்பட்டது பற்றி ஜேர்மனி சுகாதார அமைச்சர் யென்ஸ் ஸ்பான் கூறும்போது, "இது ஓர் தொழில்முறை முடிவு. நாட்டின் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து தொடர்பான மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் பரிந்துரை பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை," என தெரிவித்தார்.

ஜேர்மனி நிதித்துறை அமைச்சர் ஓலாப் ஸ்கோல்ஸ், 'ஐரோப்பிய மருந்துகள் ஏஜென்சி இந்த விவகாரத்தில் எடுக்கும் முடிவைத் தொடர்ந்து மீண்டும் ஆஸ்ட்ராசெனீகா மருந்தை பயன்படுத்துவது பற்றி முடிவு செய்யப்படும்," என கூறியுள்ளார்.

அஸ்ட்ராசெனேகா தடுப்பு மருந்தின் குறிப்பிட்ட சில விநியோக பிரிவுகளில் இருந்து வந்த மருந்துகளின் பயன்பாட்டை ஆஸ்திரியா நாடு இடைநிறுத்தியிருக்கிறது. இதேசமயம், பெல்ஜியம், போலாந்து, செக் குடியரசு, உக்ரைன் ஆகிய நாடுகள், தொடர்ந்து ஆஸ்ட்ராசெனீகா தடுப்பூசியை பயன்படுத்துவோம் என தெரிவித்துள்ளன.

உலக அளவில் பல நாடுகளில் கொரோனா வைரஸ் பாதிப்பு எண்ணிக்கை சமீப வாரங்களாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இதற்கு மத்தியில் தடுப்பூசி திட்டங்கள் பல நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வந்தாலும், அதிகரிக்கும் பாதிப்புகளுக்கு இணையாக ஐரோப்பாவில் தடுப்பூசி மருந்துகளின் விநியோகம் இல்லை என்ற கவலை சில நாடுகளுக்கு உள்ளது.

இதேவேளை, இத்தாலி நாட்டில்தடுப்பூசி பயன்பாட்டை இடைநிறுத்திய நடவடிக்கை ஓர் அரசியல் முடிவு என்று கூறியிருக்கிறார் அதன் மருந்துவ துறை தலைமை இயக்குநர் நிகோலா வரினி. 'அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி மருந்து மிகவும் பாதுகாப்பானது என்றும் அதை பெற்றுக் கொண்டவர்களின் விகிதத்துடன் ஒப்பிடுகையில், பரவலாக சாதகமான முடிவுகளே வந்துள்ளன" என்று அவர் தெரிவித்தார்.



**அஸ்ட்ராசெனேகா விளக்கம் என்ன?**

தடுப்பூசி காரணமாக இரத்த உறைவு ஏற்படும் அபாயம் இருப்பதற்கான எந்த ஆதாரமும் கண்டறியப்படவில்லைஎன்று அஸ்ட்ராசெனேகா நிறுவனம் கூறுகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன் முழுவதும் 15 நரம்பு இரத்த உறைவு (டிவிடி) பிரச்னையை எதிர்கொண்ட நிகழ்வுகள், ஒரேயொரு நரம்பில் இரத்தம் உறைந்த நிகழ்வு மற்றும் நுரையீரல் தக்கை அடைப்பு தொடர்பான 22 நிகழ்வுகள், நுரையீரலுக்குள் நுழைந்த ரத்தம் உறைதல் ஆகிய நிகழ்வுகள் பதிவாகியிருப்பதாக அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இந்த புள்ளிவிவரங்கள் 'பொதுவான மக்கள் தொகையில் இயல்பாகவே காணப்படும் பிரச்னைகளின் அறிகுறியே தவிர, உலகின் பிற பகுதிகளில் தங்களின் தடுப்பூசி மருந்தை போட்டுக் கொண்டவர்களுடன் ஒப்பிடும்போது, இந்த எண்ணிக்கை குறைவு" என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியை தயாரித்த ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி குழுவின் இயக்குநர் பேராசிரியர் ஆண்ட்ரூ பொல்லார்ட் பிபிசியிடம் பேசும்போது, "ஐரோப்பாவில் பெரும்பாலான தடுப்பு மருந்து டோஸ்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், பிரிட்டனில் இரத்த உறைவு நிகழ்வு தொடர்ச்சியாக இருக்கவில்லை" என கூறியுள்ளார்.

பின்லாந்து நாட்டில் இந்த விவகாரம் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டதில் ஆபத்து அதிகரித்ததற்கான அறிகுறி இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். பொதுமக்களுக்கு தடுப்பூசி போடுவதில் எந்த சிக்கலும் இல்லை என்பதுதான் இதில் இருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டிய சாரம்சம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பால் சுமார் 5.75 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் அதன் உறுப்பு நாடுகளில் கொரோனா வைரஸ் எதிர்ப்பு திட்டங்கள் மிகத்தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

> **ஆஸ்ட்ராசெனேகா தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களில் சிலருக்கு இரத்த உறைவு பாதிப்பு ஏற்படுவதாக கூறப்பட்டதையடுத்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகள், அந்த தடுப்பூசி திட்டத்தை இடைநிறுத்தி யிருக்கின்றன. இரத்த உறைவு என்பது இரத்தத்தின் ஓட்டத்தில் தடங்களை ஏற்படுத் தக்கூடியது என்பதால் அதை உடன டியாக சீராக்காவிட்டால் அது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக அமையும்.**

# இனத்துவ சமத்துவத்தை பேண இங்கிலாந்து கையாண்ட வழிமுறைகள்



**த.மனோகரன்**

பாராளுமன்ற ஜனநாயகத்தின் தாயமாகக் கொள்ளப்படும் இங்கிலாந்து நாட்டில் இன, மத, பிரதேச தனித்தன்மைகள் பேணப்பட மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகளைத் தெரிந்து கொள்வதன் மூலம் பல்லின, பல மத, பல கலாசாரங்களைக் கொண்ட நாடொன்றில் மக்கள் தமது தனித்துவங்களைப் பேணி ஒற்றுமையாக வாழலாம்என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

இங்கிலாந்து என்றவுடன் ஆங்கிலேயரின் நாடு என்ற எண்ணம் முன் வருவதுண்டு. ஆனால், ஐக்கிய இராஜச்சியம் என்று குறிப்பிடப்படும் இங்கிலாந்தில் நான்கு மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் வாழ்கின்றார்கள்.

அந்நான்கு மொழியினரும் தத்தமது மொழியுரிமை, மரபு வழித்தாயகம், மதவுரிமை போன்றவற்றைப் பேணிக் காக்கப் பல வழிமுறைகள் கையாளப்பட்டுள்ளன.

நாட்டின் பொது மொழியாக ஆங்கிலம் இருந்த போதும் மொத்த மக்கள் தொகையில் 9% த்தை மட்டும் கொண்டுள்ள வட பிரதேசமான ஸ்கொட்லண்ட் (SCOTLAND)இஸ்கொட்டிக்ஷ்(SCOTTISU) மொழி பேசும் மக்களின் பிராந்தியமாகக் கணிக்கப்பட்டு 129 உறுப்பினர்களைக் கொண்ட ஸ்கொட்லண்ட் பாராளுமன்றம் அமையப் பெற்று பிராந்திய நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியின் நிர்வாக மொழியாக ஸ்கொட்டிக்ஷ் மொழி விளங்குகின்றது.

அதே போன்று மேற்குப் பகுதியிலுள்ளதும், வெல்க்ஷ் (WELSU) மொழியை பேசும் மக்களைக் கொண்டதும், கார்டிப் (CARDIFF) ஐத் தலைநகரமாகக் கொண்டது மான வேல்ஸ் (WALES) பிராந்தியத்தை நிர்வகிக்க 60 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபை இயங்குகின்றது. நாட்டின் குடித்தொகையில் 5 வீதத்தைக் கொண்ட வேல்ஸ் பிராந்தியத்தின் நிர்வாக மொழி வேல்ஸ் ஆகும்.

மேற்படி இரு பிரதேசங்களுக்கு இங்கிலாந்தின் தேசிய சிறுபான்மை மொழிகளைத் தாய் மொழியாக, மக்களின் மரபு வழித் தாயகப் பிரதேசங்களாக விளங்குவதால் நாட்டின் மக்கள் தொகையின் விகிதாசாரத்தை கவனத்தில் கொள்வதை விட குறிப்பிட்ட மக்கள் குழுக்களின் பாரம்பரிய இருப்பையும், அவர்களது பிராந்திய பாதுகாப்பையும், மொழியுரிமையையும் அங்கீகரிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை சிறந்த அரசியல் பண்பாக காணப்படுகின்றது.

1997 ஆம் ஆண்டில் இவ்வதிகார பரவலாக்கல் முறைமை திட்டமிடப்பட்டு 1999 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இரு பிராந்தியங்களிலும் குறிப்பிட்ட இனத்தவரே பெரும்பான்மையாகவுள்ளனர். ஆனால், பிரச்சினைக் குரியதாக உலகிற்கு வெளிப்பட்ட வட அயர்லாந்தின் நிலைமை மாற்றமானது.

வட அயர்லாந்தின் சனத்தொகையில் பெரும்பான்மையானவர்கள் புரட்டஸ்தாந்து மதத்தவர்கள், கத்தோலிக்கர் அங்கு சிறுபான்மையினர். கத்தோலிக்க மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட அயர்லாந்திலிருந்து புரட்டஸ்தாந்து மக்களை கொண்ட வட அயர்லாந்து 1922 இல் பிரிந்து இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது வரலாறு.

வட அயர்லாந்தின் சனத்தொகை இங்கிலாந்தின் மொத்த சனத்தொகையில்3% மட்டுமே. அதிலும் கத்தோலிக்க மக்கள் சிறுபான்மையினர். இந்நிலையில் தாம் பல வழிகளிலும் புறக்கணிக்கப் படுவதாக உணர்ந்த கத்தோலிக்க மக்கள்

> **“ வெளிவிவகாரம், பாதுகாப்பு, பொதுப் பொருளாதாரக் கொள்கை, சமூகப் பாதுகாப்பு போன்ற துறைகள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க கல்வி, சுற்றுச் சூழல், சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம், சமூக சேவைகள், உள்ளூராட்சி போன்ற துறைகள் பிராந்திய நிர்வாகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ”**



பல தசாப்தங்களாகப் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டமை வரலாறு. ஒரு கட்டத்தில் பிரித்தானிய பாராளுமன்றத்திற்கு தெரிவான கத்தோலிக்க உறுப்பினரொருவர் சிறையில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்ததைக் கூட அந்நாட்டு அரசாங்கம் ஒரு பொருட்டாக மதிக்காத காலமொன்று இருந்தது. இந்நிலையில் ஐ. ஆர்,ஏ போன்ற அமைப்புக்கள் ஆயுதப் போராட்டம் நடத்தியமை வரலாறு.

இறுதியில் சிறுபான்மை கத்தோலிக்க மக்களின் உணர்வுகளுக்கு அங்கீகாரமளிக்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 108 உறுப்பினர்களைக் கொண்ட வட அயர்லாந்துக்கான பிராந்திய சபை அமைக்கப்பட்டுள்ளது. அப்பிராந்தியத்தின் பெரும்பான்மை புரட்டஸ்தாந்து மக்களுக்கு உள்ளமை போன்று சிறுபான்மை கத்தோலிக்க மக்களும் சகல உரிமைகளும் அனுபவிக்கக் கூடியதாக நிர்வாகம் உட்பட சகல துறைகளிலும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இங்கிலாந்து நாட்டின் மொத்த சனத்தொகையில் ஒரு வீதமளவேயுள்ள வட அயர்லாந்து கத்தோலிக்க சிறு பான்மை மக்களின் தனித்துவம் மதித்துப் பேணப்பட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டமை வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ளது.

இம் மூன்று பிராந்தியங்களிலும் வாழும் சிறுபான்மை சமூகங்கள் குறிப்பிட்ட பிராந்திய நிர்வாகத்தில் பங்கு பெறவும், பிரதிநிதித்துவங்களை உறுதி செய்து கொள்ளவும் ஏற்றதாக குறிப்பிட்ட மூன்று சபைகளுக்குமான தேர்தலில் விகிதாசார பிரதிநிதித்துவ முறை கைக்கொள்ளப்படுகின்றது.

வட அயர்லாந்து பிராந்திய சபைக்கான தேர்தல் தொகுதி அடிப்படையில் நடைபெற்றால் சிறுபான்மை கத்தோலிக்க மக்களின் பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் விகிதா சார பிரதிநிதித்துவத்தின் மூலம் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்திற்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி அதிகாரத்தை இரு சாராரும் பகிர்ந்துக் கொள்ள உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளமை சிறப்பு அம்சமாகும்.

வெளிவிவகாரம், பாதுகாப்பு, பொதுப் பொருளாதாரக் கொள்கை, சமூகப் பாதுகாப்பு போன்ற துறைகள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க கல்வி, சுற்றுச் சூழல், சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம், சமூக சேவைகள், உள்ளூராட்சி போன்ற துறைகள் பிராந்திய நிர்வாகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

645 பாராளுமன்ற உறுப்பினர் களைக் கொண்ட இங்கிலாந்தின் மக்கள் தொகையில் 92 வீதமானோர் வெள்ளையர்களாக இருப்பதுடன் ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலிருந்து குடியேரியோர் 8 வீதமாகவுள்ளனர்.

இங்கிலாந்தின் மொத்த சனத்தொகையில் இந்து சமயத்தை சார்ந்தவர்களின் தொகை ஒரு வீதமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டின் குடிமக்கள் சகலரதும் இன, மத, மொழி, பண்பாடு, இருப்பு போன்றவற்றை அங்கீகரித்து அமைதியான நல்லாட்சியை நிலைநிறுத்தச் சிந்திக்கும் எவரும் ஜனநாயகத்தின் தாயகமான இங்கிலாந்து கைக்கொண்டுள்ள அரசியல் அதிகாரப் பகிர்வை அவதானிப்பது அவசியமாகும்.

மோதிக் கொண்டிருந்த வட அயர்லாந்து மக்களிடம் அதிகாரப் பகிர்வின் மூலம் அமைதியேற்றப்பட்டமையை முன்மாதிரியாகக் கொண்டு விட்டுக் கொடுப்பு, பேச்சுவார்த்தைகள் மூலம் இலங்கையிலும் அமைதியை ஏற்படுத்த முடியும். அவ்வாறு செய்வதன் மூலம் சகல இன மக்களும் நிம்மதியாக, ஒற்றுமையாக வாழ்ந்து நாட்டின் சுபீட்சத்தை ஏற்படுத்தலாம்.

இங்கிலாந்து நாட்டில் உருவான பாராளுமன்ற ஜனநாயகத்தை இறுகப்பற்றி பாதுகாப்போம் எனக் குரல் கொடுக்கும் இலங்கையில் அரசியல்வாதிகள் அந்நாட்டு சிறுபான்மை மக்களது உரிமைகளை பேணிப் பாதுகாத்து உத்தவாதப் படுத்த மேற்கொண்ட வழிமுறைகளைப் பற்றியும் சிந்திப்பது காலத்தின் தேவையாகும்.

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**18**

**2014 - 07**

01D. இக் கேள்வி கூடுகளினுள்ளே இடப்பட்டுள்ள கோலத்தித் திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் ஆகும்.
உருக் கோலத்தினைக் கருதுங்கள்.கவனியுங்கள்.இங்கு மூன்று நிலைக்குத்து நிரல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றை முறையே 1ம்/2ம்/3ம் நிரல்கள் என்போம்.1ம்/2ம் நிரல்களிலுள்ள கூறுகளைப் பயன்படுத்தி 3ம் நிரலிலுள்ள உரு பெறப்பட்டிருக்கும்.1ம்/2ம் கிடைவரிசைகளில் 3ம் கிடை வரிசையில் 3ம் நிரல் உருவைப்பெற 2ம் நிரலில் வெற்றிடத்தில் மேல் கீழ் கோடுகளுக்கு இடையே வரவேண்டியது உடுக்கு உரு ஆகும்.
அதற்குரிய சரியான **விடை 01**

**2015 - 06**

01D. கூடுகளினுள்ளே இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல்.கறுப்பு முக்கோணம்/ வெள்ளை முக்கோணம் / சதுரம் தரப்படடுள்ளது. 1ம்/2ம் நிரல்களிலுள்ள கூறுகளைப் பயன்படுத்தி 3ம் நிரலிலுள்ள உருவில் வரகூடிய கோல ஒழுங்கு மேலே வெள்ளை முக்கோணம் நடுவில் கறுப்பு முக-கோணம் கீழே சதுரம் வரவேண்டும்.
அதற்குரிய சரியான **விடை 01**

**2018 - 03**

01D .குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தல
இங்கு A மான் B சிங்கம் C புலி D பசு
விடை 01 இல் A மான் புல்லினை உண்ணும் B சிங்கம் ஊனுண்ணியாகும்ட அதேசமயம் C புலி ஊனுண்ணியாகும D பசு புல்லினை உண்ணும்.
விடை 02 இல் A மான் புல்லினை உண்ணும் C புலி ஊனுண்ணியாகும் B சிங்கம் ஊனுண்ணியாகும் D பசு புல்லினை உண்ணும் 03இல் A மான் புல்லினை உண்ணும் D பசு புல்லினை உண்ணும்/ B சிங்கம் ஊனுண்ணியாகும் C புலி ஊனுண்ணியாகும் எனவே சரியான
**விடை 03**

**2018 - 04**

01D .குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தல
இங்கு A கத்தரிக்கோல் B பேனா C பென்சில் D கத்தி E அரிவாள் D கத்தி; F தூரிகை
விடை 01இல்
A கத்தரிக்கோல் D கத்தி E அரிவாள் என்பன வெட்டுக் கருவிகளாகும்.
B பேனா C பென்சில˙F தூரிகை சித்திரம் தீட்டும் கருவிகளாகும்.
இதன் மூலம் புடத்தில் தரப்பட்ட உருக்களை இரு கூட்டங்களாக்கபட்டுள்ளது.
எனவே சரியான **விடை 01**

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# மாகாண முறையை நீக்க ஒருபோதும் இணங்கோம்!

*சஜித் தரப்பு திட்டவட்டம்!!*



**கொழும்பு, மார்ச்.18**

**மாகாண சபை முறைமையை நீக்கு வதற்கு நாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படை நடவடிக்கையாகவே மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது.

தற்போது 30 வருடங்கள் வரை கடந்துள்ள நிலையில், அதன் நன்மை தீமை குறித்து, கருத்துக்களை முன்வைக்க முடியும்.

இந்தக்காலகட்டத்தில் அதனைச்செயல்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து, அதனை நிரந்தரமாகக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர, அதனை நீக்குவதற்கு நாம் ஒருபோதும் இணங்கப்போவதில்லை.

மாகாண சபை மக்கள் பிரதிநிதிகளுக்கு, மாகாண சபையின் மொத்த செலவில் 0.5 வீதமே செலுத்தப்படுகின்றது.

அனைத்து ஏனைய செலவுகளும், மாகாண சபையின் ஊடாக, கல்வி, சுகாதாரம், வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் மக்களுக்குத் தேவையான முன்னுரிமையான திட்டங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றன என அவர் குறிப்பிட்டார். (எ)

# நாட்டை மீள முற்றாக முடக்குவது நடைமுறைக்குச் சாத்தியமற்றது!

## உபுல் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்.18

நாட்டை மீளவும் முற்றாக முடக்குவது என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றது என பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



கொரோனா வைரஸ் பரவலைகட்டுப்படுத்துவதற்காக பண்டிகைக் காலத்தில் நாட்டை முழுமையாக முடக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வதேச ரீதியில் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கான முதலீட்டு மற்றும் வர்த்தக நடவக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் நாட்டை மீண்டும் முடக்குவது நடைமுறைக் குச் சாத்தியமற்றதாக காணப்படுகிறது. ஆகவே, பொதுமக்கள் இந்தப் பண்டிகைக் காலப் பகுதியில்உரிய சுகாதார வழி காட்டுதல்களைப் பின்பற்றி, பாதுகாப்பா கச் செயல்பட வேண்டியது கட்டாயமானது எனவும்அவர் குறிப்பிட்டார். (எ)

# தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் விரைவில் பல திருத்தங்கள் வரும்!

## -சுகாதார சேவைகள் பணிப்பாளர்-

கொழும்பு, மார்ச்.18

வெளிநாடுகளிலிருந்து வரும் இலங்கையர்கள் தொடர்பில் பின்பற்றப்படும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் பல திருத்தங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொரோனா பரவலைத் தடுப்பதற்கான விஷேட செயலணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வெளிநாடுகளிலிருந்து வருகை தருவோருக்கான தனிமைப்படுத்தல் காலத்தை 7 நாள்களாக குறைப்பது உட்பட பல திருத்தங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

அது மாத்திரமன்றி 7 மில்லியன் ரஷ்ய



கொரோனா தடுப்பூசிகளை முன்பதிவு செய்ய எதிர்பார்த்துள்ளோம்- என்றார்.

இதனிடையே அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வரவிருக்கும் பண்டிகை காலத்துக்குத் தேவையான சுகாதார வழிகாட்டுதல்கள் குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதன் போது தெரிவித்தார். (எ)

# சீனத் தயாரிப்பு வாசனைத் திரவியங்கள் இலங்கையில் சட்டவிரோதமாக இறக்குமதி

## சுங்க அதிகாரிகள் தீவிர விசாரணை

கொழும்பு, மார்ச்.18

**சீனாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாசனைத் திரவியங்களை சுங்கப்பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.**



தங்கள் தொழிற்சாலையின் உற்பத்திக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படும் காகிதத்தை இறக்குமதி செய்யும் போர்வையிலேயே இவை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடமை சலுகையின் கீழ் வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் அவற்றை உற்பத்தி செய்து மறு ஏற்றுமதி செய்வதற்கும் இந்த தொழிற்சாலை அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை பாணந்துறை பகுதியில் பொரலெஸ்கமுவ பகுதியில் அமைந்துள்ளது.

சீனாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 40 அடி நீளமுள்ள கொள்கலனில் அதன் தொழிற்சாலையின் தயாரிப்புக்களுக்குத் தேவையான பல்வேறு வகையான காகிதங்கள் இருப்பதாகக் கூறி கடந்த 12 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு இந்தக் கொள்கலன் கொண்டு வரப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் சுங்க அதிகாரிகள் கொள்கலனை நேற்று முன்தினம் ஆய்வு செய்த போது, சுங்க அதிகாரிகள் பல்வேறு ஷாம்புகள், கண்டிஷனர்கள் மற்றும் முடி சாயங்கள் அடங்கிய சுமார் 03 மெட்ரிக் தொன் எடையுள்ள வாசனை திரவியங்களை சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே அவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதுபோன்ற வாசனை திரவியங்களை இறக்குமதி செய்வதற்கு தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று கைத்தொழில் மற்றும் சேவைகள் பிரிவில் உள்ள சுங்க அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் சட்டவிரோத ஏற்றுமதியை மேற்கொண்ட தொழிற்சாலையின் பல அதிகாரிகள்மற்றும்கொழும்பு துறைமுகத்திலிருந்து அவற்றை அகற்ற முயன்ற பல நபர்கள் சுங்கத் திணைக்களத்துக்கு வரவழைக்கப்பட்டு அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளையும் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (எ)

# ராஜகிரியவில் இரண்டு கிலோ ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச்.18

கொழும்பு, ராஜகிரிய பகுதியில் இரண்டு கிலோ கிராம் ஹெரோயினுடன் ஒருவர் பொலிஸ் விஷேட அதிரடைப் படையினரால் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டார்.

40 வயது நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# பெரமுனவுக்கு விசுவாசமாக சு.க. செயல்பட வேண்டும்

## ஜானக வகும்பர அறிவுரை

கொழும்பு,மார்ச்.18

சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் சுதந்திரக் கட்சியின ருக்கு அநீதி இழைக்கப்படவில்லை. மாறாக பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கே அநீதி இழைக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகித்த சுதந்திரக் கட்சியினருக்கு அமைச்சுப் பதவிகளும், இராஜாங்க அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, சுதந்திரக் கட்சியினர் பெரமுனவுக்கு விசுவாசமாக செயல்பட வேண்டும் என சிறு பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்பர தெரிவித்தார்.



பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் உண்மைத் தன்மையை அறிந்து கருத்துரைக்க வேண்டும்.

அடுத்து இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதாக சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் ஒரு சிலர் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். தனித்துப் போட்டியிட்டு மக்களாணையைப் பெறமுடியும் என்பதை 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக நிரூபித்துள்ளோம்.

மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சியினர் தனித்து போட்டியிட்டால் பொதுஜன பெரமுனவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. மாகாண சபைத் தேர்தலிலும் பொதுஜன பெரமுனவே அமோக வெற்றி பெறும். சிறந்த கொள்கைகள் ஏதும் இல்லாத வகையில் எதிர்த்தரப்பினர் அரசியல் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர் - என்றார். (எ)

# உரிமையும் அபிவிருத்தியுமே தமிழ் மக்களுக்கு அவசியம்

## என்கிறார் சாணக்கியன்

களுவாஞ்சிக்குடி, மார்ச்.18

அபிவிருத்தி என்ற போர்வையில் காணிகள் பறிபோவதற்கு நாங்கள் அனுமதி வழங்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால், எங்களுக்கு உரிமையும், அபிவிருத்தியும் வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச சபை அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

### எதிர்வரும் 23 ஆம் திகதி

# கிளிநொச்சி உருத்திரபுரீச்சகம் சிவாலய வளாகத்தில் அகழ்வு

## தொல்பொருள் திணைக்களம் ஏற்பாடு

கிளிநொச்சி, மார்ச்.18

கிளிநொச்சியில் அமைந்துள்ள உருத்திரபுரீச்சகம் சிவனாலய வளாகத்தில் தொல்பொருள் ஆய்வுக்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதன்படி எதிர்வரும் 23 ஆம் திகதி இந்தப் பகுதியில் அகழ்வாராச்சி இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இந்தக் கோவில் வளாகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை துப்புரவு செய்யப்பட்டது என மக்கள் தெரிவித்தனர். இந்தக் கோவில் அமைந்துள்ள வளாகத்தில் பௌத்த சின்னங்கள் காணப்படுவதாக ஏற்கனவே தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

குருந்தூர்மலை விவகாரத்தின் பின்னர் குறித்த பகுதிக்கு பௌத்த துறவி ஒருவரும், பொலிஸாரும் சென்று பார்வையிட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இந்நிலையில் குறித்த பகுதியில் எதிர்வரும் 23ஆம் திகதி அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது. (எ)

# சிங்கராஜ வனத்துக்கு அருகிலுள்ள தனியார் காணிகள் அரசுடைமை!

கொழும்பு, மார்ச்.18

சிங்கராஜ வனப்பகுதியைச் சுற்றியுள்ள தனியாருக்குச் சொந் தமான நிலங்களை, விரைவில் அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளது.

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த எதிரிசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சுமார் 400 ஹெக்டேயர் நிலங்கள் உள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த நிலப்பகுதி காடாக இருந்த போதிலும், தனியார் நிலப்பரப்பாக காணப்படுவதால் அதில் இடம்பெறும் காடழிப்பைத் தடுப்பதற்கு வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், வனப் பாதுகாப்பு திணைக்களத் துக்கு எவ்வித அதிகாரமும் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த காணிகளைக் கையகப்படுத்துவதன் ஊடாக சிங்கராஜ வனப் பகுதியின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (எ)

ஈழநாடு





## வன்முறைகளை முடிவுறுத்துமாறு பௌத்த பிக்குகள் சங்கம் அழைப்பு

யங்கூன், மார்ச் 18

மியன்மாரின் மிக சக்திவாய்ந்த பௌத்த பிக்குகள் சங்கம் எதிர்ப்பாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருமாறு இராணுவ ஆட்சிக்குழுவிற்கு நேற்று அழைப்பு விடுத்தது.

அதுமாத்திரமன்றி, "ஆயுதமேந்திய சிறுபான்மையினர்" கடந்த மாத ஆட்சி கவிழ்ப்பிலிருந்து அப்பாவி பொதுமக்களை சித்திரவதை செய்து கொன்றது என்றும் குற்றம் சாட்டியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

துறவிகள் மியன்மாரில் செயல்படுவதற்கான நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளனர். அத்துடன், இராணுவ ஆட்சிக்கு எதிரான 2007 "காவிப் புரட்சியின்" முன்னணியில் இருந்தனர், இது ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தது.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை அகற்றி இராணுவம் ஆட்சியைப் பிடித்தது. இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் பதற்றமான சூழல் தொடர்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பங்களாதேஷ் வைத்தியசாலையில் தீ 3 கொரோனா நோயாளர் உயிரிழப்பு

டாக்கா, மார்ச் 18

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அமைந்துள்ள வைத்தியசாலை ஒன்றில் நேற்று புதன்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று கொரோனா நோயாளர்கள் உயிரிழந்தனர்.

வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் வென்டிலேட்டர்களைப் பயன்படுத்தி வந்த இந்த கொரோனா நோயாளர்கள், தீ விபத்தால் வெளியேற முடியாமல் அதில் அகப்பட்டு உயிரிழந்தனர் என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் நஸ்முல் ஹக் கூறினார்.

தீ விபத்து எதனால் ஏற்பட்டது என்பது உடனடியாகத் தெரியவில்லை என்று தீயணைப்பு பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்சமயம் வரை பங்களாதேஷில் 560,887 கொரோனா நோயாளர்களும், அதனால் 8,597 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ள நிலையில், கொரோனா வைரஸ் தொற்று நோய்களின் புதிய பரவலை சமாளிக்க முடியாமல் வைத்தியசாலைகள் திணறுகின்றன. (ஐ)

## கொரோனா இடையூறுகளால்:
# தெற்காசிய நாடுகளில் 228,000 குழந்தைகள் பலி!

நியூயோர்க், மார்ச் 18

கொரோனா தொற்றால் சுகாதார சேவைகளில் ஏற்பட்ட இடையூறு காரணமாக தெற்காசியாவில் 239,000 தாய் மற்றும் குழந்தைகளின் இறப்புகளுக்கு வழி வகுத்திருக்கலாம் என்று ஐ.நாவின் புதிய அறிக்கை கூறுகின்றது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் என 6 நாடுகளை மையமாகக் கொண்ட தெற்காசியாவில் 180 கோடி மக்கள் வசிக்கின்றனர். இந்நிலையில் கொரோனா தொற்று இடையூறுகளால் பெண்கள், சிறுவர்கள், இளம் வயதினரே அதிகம் பாதிக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

இந்நாடுகளில் இதுவரை ஒரு கோடியே 30 இலட்சம் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அத்துடன், ஒரு இலட்சத்து 86 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரணங்களும் பதிவாகியுள்ளன.

ஐ.நாவின் புதிய அறிக்கை கொரோனா தொற்று ஏற்படுத்திய நேரடி மற்றும் முறைமுக விளைவுகளை ஆராய்கின்றது.

இதன்படி நாடுகள் முடக்கப்பட்டமை, பொருளாதார இழப்புகள் காரணமாக ஊட்டச்சத்து சலுகைகள் முதல் நோய் தடுப்பு மருந்துகள் உள்ளிட்ட முக்கிய சேவைகள் கிடைக்காமையால் 5 வயதுக்கு உட்பட்ட 2 இலட்சத்து 28 ஆயிரம் குழந்தை மரணங்கள் பதிவாகின.



இதேசமயம், கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் குழந்தைகளின் வீதம் பங்களாதேஷ், நேபாளத்தில் 80 வீதமாக அதிகரித்துள்ளது.

2020ஆம் ஆண்டில் குழந்தைகளின் இறப்பு வீதம் 15.4வீதமாக அதிகரித்தது. பங்களாதேஷில் இது 13வீதமாக கூடியது. இதேபோல இலங்கையில் தாய் இறப்பு வீதம் 21.5 வீதமாக அதிகரித்தது. பாகிஸ்தானிலும், இது 21.3 வீதமாக உயர்ந்தது.

அடுத்த சில மாதங்களில் இதன் பாதிப்புக்கள் அதிகமாக இருக்கும் என்று நிபுணர்கள் அஞ்சுகின்றனர். மேலும், கொரோனா தொற்றில் அதிக சுகாதார சேவைகள் அதிக கவனம் செலுத்தின. இதனால், மற்ற நோய்களான காச நோய், மலேரியா, வாந்திபேதி, எய்ட்ஸ் உள்ளிட்ட நோயகளால் 5, 943 இளம் பராயத்தினர் மரணமாகினர் என்றும் அந்த அறிக்கை கூறியது. (ஐ)

## உலகின் மாசடைந்த நகரங்கள் 30 இல் 22 இந்தியாவுக்குரியன!

பேர்ன், மார்ச் 18

உலகின் மிகவும் மாசடைந்த 30 நகரங்களின் பட்டியலில் இந்தியாவின் 22 நகரங்கள் இடம்பிடித்துள்ளன.

சுவிற்சர்லாந்தை சேர்ந்த வளி மாசு தொடர்பான ஆய்வு நிறுவனம் 2019, 2020ஆம் ஆண்டுகளில் காற்றின் தரம் குறித்து ஆய்வு செய்தது. இது தொடர்பான அறிக்கை தற்போது வெளியாகியுள்ளது.


இந்தப் பட்டியலில் முதலிடத்தை சீனாவின் ஸின்ஜியாங் நகரம் உள்ளது. இதற்கடுத்து 9 இடங்களை இந்தியாவின் தலைநகர் புதுடில்லி உட்பட 9 நகரங்கள் இடம்பிடித்துள்ளன.

தவிர, 30 நகரங்களின் பட்டியலில் இந்தியாவின் 22 நகரங்கள் இடம்பிடித்துள்ளன. போக்குவரத்து, மின் உற்பத்தி, தொழிற்சாலை கட்டுமானங்கள், கழிவுகள் எரிப்பு, விவசாயக் கழிவுகள் எரிப்பு உட்பட பல காரணங்களால் இந்த நகரங்களில் மாசு அதிகரிக்கிறது என்று அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. (ஐ)



தென்கொரியாவின் பன்வோல் தீவுகள் முழுமையாக நாவல் நிறத்தில் காட்சியளிக்கின்றன. இங்கு வயது முதிர்ந்தவர்களே அதிகம் வசிக்கின்றனர். அவர்கள் அங்கு சுற்றுலா வரும் சிறுவர்களை கவர வீட்டுக் கூரைகள் முதல் சாலைகள் வரை நாவல் நிறத்தை பயன்படுத்தியுள்ளனர். அத்துடன் சிறுவர்களுக்கு நாவல் நிற உணவுகளையே உண்ணவும் வழங்கி ஆச்சரியப்படுத்துகின்றனர்...!

## அமெரிக்காவில் துப்பாக்கி சூடு: ஆசியர்கள் உட்பட 8 பேர் பலி!




ஜோர்ஜியா, மார்ச் 18

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் 3 மசாஜ் நிலையங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 6 ஆசிய பெண்கள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

ஜோர்ஜியாவின் - அட்லாண்டா நகரிலுள்ள மசாஜ் நிலையத்தில் செவ்வாக்கிழமை மாலை ஒரு துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் நால்வர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார்.

பின்னர், அதே பகுதியிலுள்ள மேலும் இரு மசாஜ் நிலையங்களில் மாலை 6 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது. இதிலும் நான்கு பேர் இறந்தனர்.

இந்தத் துப்பாக்கி சூட்டை நடத்தினார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 21 வயதான றொபேரட் அரோன் லாங் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## சிறுவர்களுக்கான தடுப்பூசி சோதனைக்கு ரஷ்யா தயார்

மொஸ்கோ, மார்ச் 18

சிறுவர்களுக்கான தடுப்பூசியை வரும் கோடை காலத்தில் பரிசோதனை நடத்தத் தயாராக உள்ளதாக ரஷ்யாவின் ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதில், பைசர், அஸ்ராஜெனகா, ஸ்புடனிக் தடுப்பூசிகள் அதிக பயனளிக்கின்றன என்று கூறப்படுகின்றது.

ஆனால், இந்தத் தடுப்பூசிகள் இளவயதினர் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கே செலுத்தப்படுகின்றது.

இந்நிலையில், சிறுவர்களுக்கான கொரோனா தடுப்பூசியை கண்டறிந்துள்ளதாக கமாலேயா ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் அலெக்சாண்டர் கின்டஸ்பர்க் தெரிவித்துள்ளார். இது வரும் கோடை காலத்தில் சிறுவர்களுக்கு ஏற்றிப் பரிசோதிக்கப்படும் என்று ஸ்புடனிக் 5 தடுப்பூசி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு



## இந்தியாவுக்கு எதிரான ரி - 20

# இங்கிலாந்து அணி மீண்டும் முன்னிலை!




அஹமதாபாத், மார்ச் 18

இந்திய அணியை 8 விக் கெட்களால் வெற்றி கொண்டு மீண்டும் முன்னிலை பெற்றது இங்கிலாந்து அணி.

இந்தியாவில், அந்த நாட் டின் அணிக்கு எதிராக 5 போட் டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் இங்கிலாந்து அணி விளையாடி வருகின்றது.

முதல் போட்டியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, இரண்டாவது போட்டியில் தோல்வியடைந்தது. இந் நிலையில், மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் இரவு அஹம தாபாத்தில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இந்திய அணிக்கு தொடக் கம் கொடுத்தது ரோஹித், கே.எல். ராகுல் இணை. மூன்றா வது ஓவரை வீசிய வூட்டின் பந்தில் ஓட்டம் எதையும் பெறாமலே கே.எல். ராகுல் விக்கெட்டைப் பறி கொடுத் தார். அவரைத் தொடர்ந்து 15 ஓட்டங்களை எடுத்திருந்த ரோஹித் சர்மாவும் வூட்டின் பந்திலேயே ஆட்டமிழந்தார்.

மூன்றாவது விக்கெட்டுக் காக இஷான் கிஷன், விராட் கோலி இணை ஆடியது. அறி முகமான கடந்த போட்டியில் அரைச்சதம் அடித்து அசத்திய கிஷன் 4 ஓட்டங்களுடன் ஜோர்தானின் பந்தில் வெளி யேறினார். கோலி - பந்த் இணை கூட்டணி அமைத்து ஆடினர்.

இருவரும் இணைந்து இந்தியாவின் ஓட்ட எண்ணிக் கையை அதிகரித்தனர். 3 பௌண்ட்ரிகளுடன் 25 ஓட் டங்களை எடுத்திருந்த பந்த் ரன் அவுட் ஆனார். ஆனால் மறு முனையில் பௌண்ட்ரி, சிக்ஸர் என விளாசி சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தினார் கோலி. இதனிடையே ஸ்ரே யாஷ் ஐயர் 9, ஹார்திக் பாண்ட்யா 17 ஓட்டங்கள் என ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 156 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.

விராட் கோலி 46 பந்து களில் 8 பௌண்ட்ரிகள், 4 சிக் ஸர்களுடன் 77 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்திருந் தார்.

இங்கிலாந்தின் பந்து வீச்சில் மார்க் வூட் 3, ஜோர்தான் 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தா டிய இங்கிலாந்து அணிக்கு ஜசோன் றோய், ஜோஸ் பட்லர் இணை தொடக்கம் கொடுத் தது. றோய் 9 ஓட்டங்களுடன் வீழ்தாலும், பட்லர் இந்தியா வின் பந்து வீச்சை திணறடித் தார்.

இதனிடையே, இரண்டா வது விக்கெட்டுக்காக இணைந்த டேவிட் மலன் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார். அடுத்து வந்த பெயர்ஸ்ரோ பட்லருடன் இணைந்து அதிரடி காட்ட 18.2 ஓவர்களில் 2 விக் கெட்களை மட்டும் இழந்து இலகு வெற்றி பெற்றது இங்கி லாந்து அணி.

பட்லர் 52 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களு டன் 83 ஓட்டங்களையம், பெயர்ஸ்ரோ 28 பந்துகளில் 5 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட் டங்களையும் ஆட்டமிழக்கா மல் பெற்றனர்.

இந்தியாவின் பந்து வீச்சில் சாகல், வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் ஒவ்வொரு விக் கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக பட்லர் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 2 - 1 என்ற கணக்கில் இங்கி லாந்து அணி முன்னிலை பெற் றுள்ளது.

(ஐ)




# இரு வீரர்களுக்கு 8 ஆண்டுகள் தடை!

டுபாய், மார்ச் 18

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.)யின் ஊழல் மோசடி தடுப்பு விதிகளின் கீழ் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியின் வீரர்களான மொஹமட் நவீட் மற்றும் ஷய் மான் அன்வர் ஆகிய இருவருக்கும் தலா 8 வருடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையின்படி அவர்கள் இருவரும் 8 வருடங் களுக்கு கிரிக்கெட் தொடர்பான எந்தவொரு நடவடிக் கையிலும் ஈடுபடவோ அல்லது பங்குபற்றவோ முடி யாது.

இரு வீரர்களுக்கும் தற்காலிகத் தடை விதிக்கப்பட்ட 2019 ஒக்ரோபர் 16 ஆம் திகதியிலிருந்து தடை நடை முறைக்கு வருவதாக சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித் துள்ளது.

2019 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற ஐ.சி.சி.யின் ஆண்களுக்கான இருபதுக்கு - 20 உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுப்போட்டியின் போது ஊழல் மோசடி செய்ய முயற்சித்தனர் என்று இருவர் மீதும் 2019 ஒக்ரோபர் 19 ஆம் திகதி தற்காலிக தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி தடுப்பு விதிகளில் 2 விதிகளை மீறியமை உறுதியாகிய நிலையில் இருவரும் குற்றவாளி களாக இனங்காணப்பட்டு இவ்வாறு 8 வருட தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மகளிர் ஒருநாள் தொடர்:

# இந்தியாவை வீழ்த்தியது தென்னாபிரிக்கா அணி!



லக்னோ, மார்ச் 18

இந்திய பெண்கள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 4 -1 என்ற கணக்கில் வெற்றி கொண்டது தென்னாபிரிக்க பெண்கள் அணி.

இந்தியா வந்த தென்னாபிரிக்க பெண்கள் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி யது.

மூன்று போட்டிகளில் வென்று ஏற்கனவே தொட ரை தென்னாபிரிக்கா வெற்றியை உறுதி செய்த நிலை யில், இறுதிப் போட்டியில் நேற்று களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு அதன் தலைவி மிதாலி ராஜ் 79 ஓட்டங்களை பெற்றுக் கொடுத் தார். 49.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 188 ஓட்டங்களை அந்த அணி பெற்றது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் நடின டி கிரேக் 3, நொன்டுமிசோ, ருமி ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு மிக்னொன் டு பிரஷ் 57, அன்னேக் பொஸ்ச் 58 ஓட்டங்களை குவித்தனர். இதனால், 48.2 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்தியாவின் பந்து வீச்சில் ராஜேஸ்வரி 3 விக்கெட் களைக் கைப்பற்றினார். (ஐ)




# மூவகை கிரிக்கெட்டிலும் கோலி மட்டுமே முதன்மை!

டுபாய், மார்ச் 18

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) வெளியிட்ட இருபது - 20 போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலில் இந்திய அணித் தலைவர் விராட் கோலி 5ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஒருநாள் போட்டி தரவரிசையில் முதலிடம், டெஸ்ட் மற்றும் இருபது - 20 போட்டிகளின் தரவரிசையில் 5-வது இடம் என முதல் 5 இடங்களுக்குள் இருக்கும் ஒரே வீரர் விராட் கோலி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

அஹமதாபாத்தில் இங்கிலாந்துக்கு எதிராக 2, 3ஆவது இருபது - 20 போட்டிகளில் அவர் 73, 77ஓட் டங்களைப் பெற்றார். இதன் மூலம் 47 புள்ளிகளைப் பெற்று 5ஆவது இடத்துக்கு அவர் முன்னேறினார்.

இந்தியா - இங்கிலாந்து மூன்றாவது போட்டியில் ஆட்டமிழக்காமல் 83 ஓட்டங்களைப் பெற்ற பட்லர் 5 இடங்கள் முன்னேறி 19ஆவது இடத்தைப் பிடித்தார்.(ஐ)

# பங்களாதேஷ்க்கு எதிரான போட்டியில் ரெய்லர் விலகல்!

வெலிங்டன், மார்ச் 18

பங்களாதேஷுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டி யிலிருந்து நியூஸிலாந்தின் றோஸ் ரெய்லர் விலகியுள் ளார். இடது தொடை எலும்பில் ஏற்பட்ட சிறு விலகல் காரணமாகவே அவர் விலகினார்.

அணியின் தலைவர் வில்லியம்ஸன் தொடரிலிருந்து விலகிய நிலையில் ரெய்லரின் விலகல் நியூஸிலாந்து அணிக்கு பாதிப்பை தரும் என்று கருதப்படுகின்றது. இந்நிலையில் ரெய்லருக்குப் பதிலாக சகலதுறை வீரர் மார்க் சப்மன் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

நேற்று பயிற்சி ஆட்டம் ஒன்றில் விளையாடியபோதே ரெய்லர் காயமடைந்தார். முதல் போட்டியில் ரெய்லர் விளையாடாது போனாலும் மற்ற இரு போட்டிகளிலும் அவர் விளையாடுவார் என்று அந்த அணியின் பயிற்றுவிப்பாளர் ஹரி ஸ்ரேட் கூறி யுள்ளார்.

நியூஸிலாந்தில் நடக்கும் ஒருநாள், இருபது - 20 தொடர்களில் பங்களாதேஷ் பங்கேற்கிறது. இரு அணி களிடையேயுமான முதல் ஒருநாள் போட்டி நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது. (ஐ)



# ரஞ்சனின் ரிட் மனுவை தள்ளுபடிசெய்ய சட்டமா அதிபர் ஆட்சேபனை!

கொழும்பு, மார்ச் 18

தனது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதைத் தடுக்கும் வகையில் எழுத்தாணை ஒன்றைப் பிறப்பிக்குமாறு, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்துள்ள ரிட் மனுவை விசாரணைக்கு ஏற்காது நிராகரிக்க வேண்டும் என சட்டமா அதிபர் சார்பில் அடிப்படை ஆட்சேபனை முன்வைக்கப்பட்டது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் நீதிபதி மாயதுன்ன கொரயா ஆகியோர் முன்னிலையில் ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்த ரிட் மனு நேற்று முன்தினம் மீள பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் ஆஜராகிய மேலதிக சொலிசிற்றர் ஜெனரால் இந்திகா தேமுனி டி சில்வா இந்த அடிப்படை ஆட்சேபனையை முன்வைத்தார்.

ரஞ்சன் ராமநாயக்க கோரும் நிவாரணத்தை எழுத்தாணை ஒன்றூடாக வழங்க முடியாது எனக் கூறியே அவர் இந்த அடிப்படை ஆட்சேபனையை முன்வைத்தார்.

இந்த மனு ஊடாக சவாலுக்கு உட்படுத்தப்படும் விடயம், நீதிமன்ற ரிட் அதிகாரத்தை (எழுத்தாணை அதிகாரத்தை) பயன்படுத்தி செயல்படுத்த முடியாது. சட்டத்துக்கு மாற்றமான விதிகளைக் கொண்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை விசாரணைக்கு ஏற்காது தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரதிவாதிகள் சார்பில் நான் அடிப்படை ஆட்சேபனைகளை முன்வைக்கின்றேன்.

அத்துடன் நீதிமன்றை அவமதித்தமை தொடர்பிலான குற்றத்துக்கு குற்றவாளியாகக் காணப்படும் நபர் மேன்முறையீடு செய்ய முடியாது என ஏழு நீதியரசர்களைக் கொண்ட குழாம் ஒன்றின் தீர்ப்பும் சொல்கிறது என இந்திகா தேமுனி டி சில்வா வாதிட்டார்.

இதனையடுத்து ரஞ்சன் ராமநாயக்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தனது வாதத்தை முன்வைத்தார்.

கடந்த ஜனவரி 12 ஆம் திகதி, நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காக தனது சேவை பெறுநருக்கு 4 வருட கடூழியச் சிறைத் தண்டனையை விதிக்கப்பட்டதன் பின்னர், அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியாது எனும் ஆலோசனையை சட்டமா அதிபர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு வழங்கியுள்ளார்.

சட்ட மா அதிபரின் இந்த நிலைப்பாடு சட்டத்துக்கு முரணானது. எனது சேவை பெறுநர் குற்றவாளியாக காணப்பட்டு தண்டனை அறிவிக்கப்பட்ட உடனே, அரசமைப்பின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவராக ஆக மாட்டார்.

அரசமைப்பின் 105 (3) ஆம் உறுப்புரைக்கு உட்பட்ட நீதிமன்றத்தை அவமதித்தல் எனும் விடயம், குற்றவியல் விவகார குற்றச்சாட்டு எனும் ரீதியில் தண்டனைக்குரிய குற்றம் என எங்கும் வரைவிலக்கணப் படுத்தப்படவில்லை என்று பாயிஸ் முஸ்தபா வாதிட்டார்.

இந்நிலையில் மேலதிக வாதப் பிரதிவாதங்கள் இன்று 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு பிறப்பித்த தடை உத்தரவு எதிர்வரும் இன்று 18 ஆம் திகதிவரை நீடிக்கப்படுவதாக நீதிமன்றால் அறிவிக்கப்பட்டது. (எ)

# தனி ஈழம் குறித்து இங்கு யாரும் அலட்டிக்கொள்ள தேவையில்லை!

## சுசில் பிரேமஜயந்த சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 18

**தமிழக தேர்தல் களத்தில் இலங்கைத் தமிழர்களின் விவகாரம் பிரதான தேர்தல் பிரசாரமாகக் காணப்படுகின்றது. தேர்தல் முடிவடைந்த பிறகு தேர்தல் மேடைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தும் மறைக்கப்பட்டு விடும்.**



அல்லது மறக்கப்பட்டு விடும். எனவே, தனி ஈழம் தொடர்பில் இந்திய அரசியல் கட்சி குறிப்பிட்டுள்ளதாக வெளிவரும் கருத்துக்கு இங்கு அதிகளவு கவனம் செலுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது என தொலைநோக்கு கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பெரும் போராட்டத்துக்கு மத்தியில் 30 வருட கால சிவில் யுத்தம் நிறைவடைந்துள்ளது. தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, நாட்டில் இனியொருபோதும் பிரிவினைவாதச் செயல்பாடுகள் எவ்வழிகளினாலும் தோற்றம் பெறாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு தனிமைப்படுத்தல் இல்லையாம்

கொழும்பு, மார்ச் 18

வெளிநாடுகளில் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் இலங்கைக்குத் திரும்ப அனுமதி வழங்குவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் அவர்கள் நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

இரண்டு முறை தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்டவர்களும், இரு வாரங்கள் தனிமைப்படுதலை நிறைவு செய்தவர்களும் விரைவில் இலங்கைக்கு வருகைதர முடியும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர்கள் இலங்கைக்கு வந்ததும் பி.சி.ஆர். பரிசோதனைகளை அடுத்து வீட்டுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# மத்திய வங்கி பிணைமுறி மோசடி: சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை!

கொழும்பு, மார்ச் 18

2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்து சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு மார்ச் 29 மற்றும் 31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பாகவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபரின் கோரிக்கைக்கு அமைய மத்திய வங்கி மோசடி குறித்து விசாரணை செய்ய இரு நீதிமன்ற தீர்ப்பாயங்கள் கடந்த மாதம் நியமிக்கப்பட்டன.

இதன்படி, மேல் நீதிமன்ற நீதிபதிகளான டி.தொடவத்த, எம். இரஸதீன் மற்றும் மஞ்சுள திலகரட்ன ஆகியோர் அடங்கிய ஒரு நீதிமன்ற தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது.

இரண்டாவது நீதிமன்ற தீர்ப்பாய நீதிபதிகள் குழாமில் மேல் நீதிமன்ற நீதியரசர் அமல் ரணராஜா, பலல்லே மற்றும் ஆதித்ய படபந்திகே ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

குறித்த வழக்கில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், அர்ஜுன அலோசியஸ் மற்றும் 8 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (எ)

# ‘எவ்வாறான நிபந்தனைகள் அடிப்படையில் சீனாவிடமிருந்து அரசு கடன் பெறுகின்றது?’

## ஐ.ம.ச. எம்.பி. அலுவத்துவல கேள்வி

கொழும்பு, மார்ச் 18

சீனாவிடமிருந்து எவ்வாறான நிபந்தனைகளின் அடிப்படையில் உத்தேச கடனை அரசாங்கம் பெற்றுக்கொள்ளவுள்ளது என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலுவத்துவல வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவாறு வருமாறு:

தற்போதைய அரசாங்கத்தில் கருத்து சுதந்திரத்துக்கு ஏற்படுத்தப்படும் தடைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்றில் நடத்தப்படும் போட்டி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட மாணவியொருவர் சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான செயல்பாடுகள் இடம்பெற்று வருவதாக தெரிவித்ததை அடுத்து, பொலிஸார் அந்த மாணவியின் வீட்டுக்குச் சென்று வாக்கு மூலம் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஒரு மாணவியொருவர் அவரது கருத்தை தெரிவிப்பதற்கான உரிமையும் தற்போது பறிக்கப்பட்டு வருகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தல்காலங்களின் போது சுற்றுப்புறச் சூழல் தொடர்பில் அக்கறை கொண்ட தலைவர் என்றே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் மணல், மண் மற்றும் கற்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் தேவையில்லை என்று அறிவித்தார். பொதுத் தேர்தல் வரையிலும் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டது. இதனால் சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட்டது என்பதை சுற்றாடல் அமைச்சரே ஏற்றுக்கொண்டுள்ளார். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் வெள்ளை வான் கலாசாரம் ஒன்று இருந்ததை அனைவரும் அறிவார்கள். தற்போது கறுப்பு வான் கலாசாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஊடகவியலாளர் சுஜீவகமகே கடத்தப்பட்டு தாக்கப்பட்ட நிலையில் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார். இந்நிலையில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நியாயம் கிடைக்கப்பெறவேண்டும்.

அரசாங்கம் சீன அரசாங்கத்திடமிருந்து 10 பில்லியன் யுவான்களை கடனாக பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்து வருகின்றது. இவ்வாறு அதிக வட்டி வீதத்தில் கடன் பெற்றுக் கொள்வதில் உள்ள நோக்கம் என்ன? இதற்காக நாட்டின் எந்த வளத்தை சீனாவுக்கு வழங்கப் போகின்றார்கள் என்பதை அரசாங்கம் தெளிவாக நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும்’ என வும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை குறித்து மேலும் 2 நாள்கள் சபையில் விவாதம்!

கொழும்பு, மார்ச்.18

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் மேலும் 2 நாள்கள் விவாதம் இடம்பெறவுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதத்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வணிகக் குழுக் கூட்டத்தின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# ரிஷாட்டுக்கு எதிராக அவதூறு: அமைச்சர் விமலுக்குத் தடை!

## கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மார்ச் 18

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்ஸ அவதூறு கருத்துக்களை வெளியிடுவதற்கு கொழும்பு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது.

ரிஷாட் பதியுதீனால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தத் தடை உத்தரவு மார்ச் 31 ஆம் திகதி வரை அமுலிலிருக்கும் என்றும் கொழும்பு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முஸ்லிம் தீவிரவாதம் மற்றும் ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ஸ அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு எதிராக ரிஷாட்பதியுதீன் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அத்தோடு தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதாக தெரிவித்து 100 மில்லியன் ரூபா இழப்பீடு கோரி குறித்த மனுவைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

ஈழநாடு
Eelanadu

# இம்ரான் கானின் விருப்புக்கு அமையவா நாட்டின் தேசிய பாதுகாப்பு முன்னெடுப்பு?

## மகல்கந்தே சுதத்த தேரர் கேள்வி

**கொழும்பு, மார்ச் 18**

**எமது நாட்டின் தேசிய பாதுகாப்பு இம்ரான் கானின் விருப்புக்கமையைதான் மேற்கொள்ளப்பட வேண்டுமா? என்று மகல்கந்தே சுதத்த தேரர் கேள்வியெழுப்பியுள்ளார்.**

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

“பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர புர்கா மற்றும் நிக்காப் ஆகிய ஆடைகளுக்கு தடை விதிக்கும் வகையிலான அமைச்சரவை பத்திரத்துக்கு கையொப்பமிட்டுள்ளார். இதனை தொடர்ந்து மண்ணெணெய் ஊற்றிய தீப்பந்தம் போல் பல இடங்களிலும் அறிக்கைகள் வெளியிட ஆரம்பித்திருக்கின்றனர். இந்த செயற்பாட்டுக்கு மத்தியில் பாகிஸ்தான் தூதுவரும் குறித்த செயல்பாட்டுக்காக கவலை வெளியிட்டு ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார், எமது நாட்டின் தேசிய பாதுகாப்பிற்காக ஒரு தீர்மானம் எடுக்கப்படும் போது, பாகிஸ்தானிய தூதுவரின் அறிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கும் வகையில் ரிஷாத் பதியுதீனும் ஒரு அறிக்கையை சமர்பித்திருக்கிறார்,

உண்மையில் புர்கா அல்லது நிக்காப் எனப்படும் ஆடையானது எமது நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு பாரிய ஒரு சவாலாகும். காரணம் குறித்த ஆடையை அணிந்த பின்னர் ஆடைக்குள் இருப்பவர் ஆணா, பெண்ணா, குற்றவாளிகளா என்பது யாருக்கும் தெரியாது, எனவே தான் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யவதற்காக குறித்த ஆடையை தடை செய்யும் அமைச்சரவை பத்திரத்திற்கு சரத் வீரசேகர கையொப்பமிட்டுள்ளார், அவ்வாறெனில் எமது நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய றிசாத் பதியுத்தீன் விரும்பவில்லையா அல்லது பாகிஸ்தான் அரசாங்கமோ பாகிஸ்தான் தூதரகமோ விரும்பவில்லையா? நான் கேட்கிறேன் எமது நாட்டின் தேசிய பாதுகாப்பு இம்ரான் கானின் விருப்புக்கமையைதான் மேற்கொள்ளப்பட வேண்டுமா? எனவே நாம் தெளிவாக குறிப்பிடுகிறோம் ஒரு போதும் தேசிய பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள குறித்த தீர்மானம் மாற்றியமைக்கப்படாது.” எனவும் அவர் தெரிவித்தார்.

*2024 ஜனாதிபதித் தேர்தல்:*

# பொதுவேட்பாளருக்கு பொன்சேகா எதிர்ப்பு!

*கொழும்பு, மார்ச் 18*

*2024 ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரே வேட்பாளராக களமிறங்க வேண்டும் என்று அக்கட்சியின் தவிசாளர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.*

*“2024 ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளரை களமிறக்கமாட்டோம். வாடகை வேட்பாளர்களை களமிறக்கியதால் ஏற்பட்ட விளைவுகள் அனைவருக்கும் தெரியும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்தான் வேட்பாளராக போட்டியிடவேண்டும். அது தொடர்பான அறிவித்தலை முன்கூட்டியே வெளியிட்டுள்ளமை வரவேற்கக்கூடிய விடயமாகும். அப்போதுதான் மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும்.” - எனவும் சரத் பொன் சேகா சுட்டிக்காட்டினார்.*

*அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்துக்கொண்டு கூட்டணியாக பயணிப்பதற்கு நாம் தயார். ஆனால் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் ஐ.தே.கவில் இருந்தால் அது சாத்தியப்படாது எனவும் சரத் பொன் சேகா குறிப்பிட்டார்.*

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை சந்திக்கிறார் டக்ளஸ்!

*யாழ். செயலகத்தில் சனியன்று சந்திப்பு*



*யாழ்ப்பாணம், மார்ச் 18*

*“காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை வரும் சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடுவேன்”, என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.*

*யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். இதன்போது யாழ். மவாட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் உடனிருந்தார்.*

*இந்த சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு:*

*“இன்று (நேற்று) காலை தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவாக வடக்கிலுள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களை*

*சந்தித்து அவர்களின் தேவைப்பாடுகள் மற்றும் அவர்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து தன்னை நேரில் வந்து சந்திக்குமாறு எனக்குக் கூறினார்.*

*“இதற்கமைய வடக்கு மாகாணத்திலுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை எதிர்வரும் சனிக்கிழமை மாவட்ட செயலகத்தில் அவர்களை சந்தித் துக் கலந்துரையாடுவேன்”, என்றும் அவர் கூறினார். (ஐ-3)*



# திருமலையில் 3வது நாளாக தொடரும் உண்ணாவிரதம்!

*திருகோணமலை, மார்ச் 18*

*காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளை சர்வதேசம் கவனத்தில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட தலைவி திருமதி நா. ஆஷா மற்றும் திருமதி இரா. கோசலாதேவி இருவரும் தொடந்து சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*நேற்று புதன்கிழமை 3 ஆவது நாளாக திருகோணமலை சிவன் ஆலய முன்றிலில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.*

# அசாத் சாலியின் வாகனத்திலிருந்து கைத்துப்பாக்கி ஒன்று மீட்பு

*கொழும்பு, மார்ச் 18*

*மேற்கு மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி கைது செய்யப்படும் போது அவர் பயணித்த மோட்டார் வாகனத்தில் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தப்பட்ட தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.*

*பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் குறித்த வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது இவை கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்*

*கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். முன்னாள் ஆளுநர் அசாத்சாலி நேற்றைய தினம் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

# ஊடக வல்லுனர்களை உருவாக்க புதிய ஊடகக் கற்கை நிறுவனம்!

*கொழும்பு, மார்ச் 18*

*நவீன உலகிற்கு முகங்கொடுக்கக் கூடிய தொழில்முறை திறன்களைக் கொண்ட ஊடக வல்லுனர்களை உருவாக்குவதற்காக எதிர்வரும் சில மாதங்களுக்குள் ஊடக ஆய்வு நிறுவனமொன்றை அமைக்க வெகுஜன ஊடக அமைச்சு திட்டமிட்டுள்ளது.*

*‘சுபீட்சத்தின் நோக்கு’ எனும் கொள்கைப் பிரகடனத்தின் கீழ் ஊடகக் கற்கைக்கான உயர்கல்வி நிறுவனமாக இது ஸ்தாபிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*மிகவும் திறமையான ஊடக வல்லுனர்களை உருவாக்குவதற்காக சர்வதேச தரத்திற்கேற்ப அரச அனுசரணையுடன் இந்தக் கல்வி நிறுவனம் உருவாக்கப்படவிருக்கின்றது.*

*இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் ஊடக அமைச்சில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் தலைமையில் இடம்பெற்றது.*







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
1.00 மணி : நலம்தானா - மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - கிறாக்




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்




7.30 மணி : பல்துறைக் கருவூலம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு - இசை நிகழ்ச்சி



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் கைதடி ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற் சுவாமிகள் கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் கைதடி ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித வேளாங்கன்னி மாதா மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு